22 APR 2004

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 10 வியாழக்கிழமை (22-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:149

# இன்று சபாநாயகர் தெரிவில் திடீர் திருப்பம் ஏற்படலாம்!

## 13 ஆவது நாடாளுமன்றம் முதல் முறையாகக் கூடுகின்றது

கொழும்பு,ஏப்ரல்22

**நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிராத ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்துள்ள நிலையில் பதின்மூன்றாவது நாடாளுமன்றம் இன்று முதல்தடவையாகக் கூடுகின்றது.**

**அதில் முதல் நிகழ்ச்சியாக இடம்பெறும் சபாநாயகர் தெரிவில் ஒரு பலப்பரீட்சைக்கு அரசுத் தரப்பும் எதிரணியும் வரிந்து கட்டிக்கொண்டு தயாராக இருக்கும் நிலையில், இன்றைய நாடாளுமன்ற நிகழ்வுகளிலும் சபாநாயகர் தெரிவிலும் திடீர்த் திருப்பங்கள் ஏற்படும் என்று நோக்கர்கள் கூறுகின்றனர்.**

ஆட்சி அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கோ அலலது பிரதான எதிர்க்கட்சித் தரப்பான ஐக்கிய தேசிய முன்னணிக்கோ நாடாளுமன்றத்தில் தனித்துப் பெரும்பான்மைப் பலம் இல்லை. இதனால், சபாநாயகர் தெரிவில் சிறிய கட்சிகளின் பங்களிப்பு முக்கியமாகின்றது.

புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் யார் என்பதை சிறிய கட்சிகள்தான் தீர்மானிக்கப்போகின்றன என்பது ஓரளவு நிச்சயமாகிவிட்டது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஐ.ம.சு. கூட்டமைபபின் பலம் 105.

ஒன்பது உறுப்பினர்களையும் கொண்ட ஜாதிக ஹெல உறுமய அரசுத் தரப்பை ஆதரிக்கும் என்றால் அரசுத் தரப்பின் வேட்பாளரான டியூ குணசேகரா சபாநாயகராவது உறுதியாகிவிடும்.

ஆனால், சபாநாயகர் தேர்வில் நடுநிலை வகிக்கப்போவதாகக் ஹெல உறுமய நேற்றுவரை கூறிவந்தது. அந நிலைப்பாட்டில் இறுதி நேரத்தில் மாற்றம் ஏதும் செய்து, அரசுத் தரப்பை ஆதரிக்கப் போவதாகக் ஹெல உறுமய இன்று அறிவிக்காவிட்டால் இத்தேர்தலில் ஆளும் தரப்பு வெல்வது கேள்விக் குறியாகும்.

ஜாதிக ஹெல உறுமய முன்னர் கூறிய - நடுநிலை வகிக்கும் - தனது முடிவில் உறுதியாக இருக்குமானால புதிய சபாநாயகரைத் தெரிவு செய்வதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமயவின் எம்.பி. அரசுப் பக்கம் தாவினார்!

கொழும்பு,ஏப்.22

ஜாதிக ஹெல உறுமயவின் சாரபில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட பிக்கு ஒருவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின பக்கத்துக்கு - அரசின் பக்கத்துக்கு - மாறிவிட்டார் என்று தெரியவருகின்றது.

வண. அப்பரேக் புண்ணானந்த தேரரே இவ்வாறு அணி மாறவிருப்பவர் என்று கூறப்படுகின்றது.

இவர் கடந்த பொதுத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயவின் பட்டியலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டவர். தேர்தல் நெருங்கிய சமயத்தில் தாம் ஹெல உறுமயவிலிருந்து விலகிவிட்டார் என அவர் அறிவித்தார்.

ஆனால், தேர்தல் முடிவுகளின்படி ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எனினும், தேர்தல் முடிவுகள் அறி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் எம். பிக்கள் அணி மாறமாட்டார்கள்

### ரணில் விக்கிரமசிங்க பூரண நம்பிக்கை

ஐக்கியதேசியக் கட்சி எம்.பிக்கள சிலர் கட்சியைவிட்டு விலகி அரசுப் பக்கம் போயுள்ளனர் என வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்று கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கடசி உறுப்பினர்கள் மீது தமக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய வேளையில அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பாரம்பரிய உடையுடன் தமிழ் எம்.பிக்கள் இன்று சபைக்கு!

வவுனியா,ஏப்.22

தமிழரசுக்கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று நடைபெறவிருக்கும் முதலாவது நாடாளுமன்ற அமர்விற்குப்போகும்போது தமிழரின பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் உடைகள் அணிந்து செல்லவிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களுக்கு என்று தனியான ஒரு பாரம்பரியமும், கலாசாரமும் இருக்கின்றது. இதனை வெளிக்காட்டும் வகையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தனித்தேசிய இனம், தன்னாட்சி உரிமை என்பவற்றை முன்வைத்து நாம் இந்தத்தேர்தலில போட்டியிட்டு 22 ஆசனங்களைப் பெற்றுள்ளோம். எனவே, தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் நாடாளுமன்றம் செல்லவிருகின்றோம். - என்று தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

(எ-9-164)

## சு.க.-ஜே.வி.பி. இழுபறி இன்னும் தீர்ந்தபாடில்லை!

கொழும்பு,ஏப்.22

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான இழுபறி இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் பதின்மூன்றாவது நாடாளுமன்றம் இன்று முதன்முதலாகக் கூடுகின்றது.

இரு கட்சிக்கும் இடையிலான பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கும் இணக்கநிலை ஒன்று ஏற்பட்டுவிட்டதாக நேற்றைய பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்த போதிலும், அது தவறு என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தமக்கு அளிக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட, சில அமைச்சுக்கள் தமது தரப்பினருக்கு வழங்கப்படவில்லை என ஜே.வி.பியினர் சீற்றங்கொண்டதை அடுத்தே ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான இழுபறி ஆரம்பமானது என்பது தெரிந்ததே.

இதனால், தமக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களை ஏற்க ஜே.வி.பியினர் மறுத்துவிட்டனர்.

தமக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தி அமைச்சு தங்களுக்குத் தரப்படவேணடும் என ஜே.வி.பி. பிடிவாதம் பிடித்து வருகின்றது. ஆனால், அதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுத்து வருகின்றார்.

இந்நிலையில், மகாவலி அபிவிருத்தி அமைச்சை ஜனாதிபதியே வைதிருப்பார் என்றும் அந்த அமைச்சுக்குரிய பிரதியமைச்சர் பதவி ஜே.வி.பியினருக்கு வழங்கப்படும் என்றும் சமரசத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. அத்திட்டத்தை ஏற்ற ஜே.வி.பியினர் இணங்கினர் என்றும் கூடத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இணக்கநிலை ஏற்பட்டதை அடுத்து ஜே.வி.பியினர் தமக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுப் பதவிகளை ஏற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் புதிதாக அமைத்த வீதி திறப்பு

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக புதிதாக அமைகப்பட்ட ஏ-9 வீதிப்பகுதி நேற்று புதன்கிழமைமுதல் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டுவந்த ஆலயத்துக்கும் வியாபார நிலையங்களுக்கும் இடையிலான ஏ-9 வீதியின் பகுதி நேற்று மூடப்பட்டது. ஆலயத்துக்கு முன்பாகக் கடைகளுககுப் பின்புறமாகப் புதிதாக அமைக்கபபட்டு வந்த வீதிப்பகுதியே நேற்று திறந்துவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(எ-9-3)

## 'இலங்கையிலேயே இருக்கிறேன்' தப்பியோடிய கருணா தம்பட்டம்!

கொழும்பு,ஏப்.22

கருணா தான் இலங்கையிலேயே தங்கியுள்ளார் எனவும் கோழை போல இலங்கையை விட்டு ஓடிவிடவில்லை என்றும் கூறியிருக்கின்றாராம்.

தாய்லாந்துத் தலைநகர் பாங்கொக்கைத் தளமாகக கொண்டு இயங்கும் 'ஏஸியன்' ட்ரிபியூன் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

கருணாவின் பேச்சாளர் வரதனோடு தொலைபேசியில உரையாடிய சமயம் கருணாவின் சார்பில் இத்தகவலை அவர் தெரிவித்தார் என்று அச்சஞ்சிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

"நாங்கள் இலங்கையில்தான் இருக்கின்றோம். நாங்கள் கோழைகள் போன்று ஓடமாட்டோம். எங்களுக்கு எமது உயிர் பெரிதல்ல. எல்லாவற்றையும்விட எங்கள் கொள்கைதான் எங்களுக்கு முக்கியம்" - என்று வரதன கூறினாராம்.

நாங்கள் இலங்கையில் இருப்பது பிரபாகரனுக்கும் அவரது வடபகுதி லெப்டினட்டுகளுக்கும் தெரியாத இரகசியமல்ல. எங்கள் உறுப்பினர்களைக் கைவிட்டுக் காட்டிக் கொடுத்துவிட்டு நாங்கள் அப்படித் தப்பி ஓடவில்லை.

கருணா இன்னும் உயிருடன் இருக்கிறார். தன்னுடைய உயிருக்குப் பயந்து அவர் (14ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பி.திஸாநாயக்காவிடம் நேரில் அழைப்பாணை வழங்க முடியவில்லை

### நீதித்துறை அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.22

முன்னாள் அமைச்சர் எஸ்பி. திஸாநாயக்காவை உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரும் அழைப்பாணையை அவருக்கு விநியோகிக்க முடியாமல் இருப்பதாக நீதித்துறை அதிகாரிகள் நேற்று உயர் நீதிமன்றததில் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் பொது நிகழ்ச்சி ஒன்றில் உயர் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார் எனக் கூறப்பட்டிருக்கின்றது. அந்நிகழ்வில் அவர் ஆற்றிய உரை அடங்கிய ஒளிப்பதிவு நாடாவை ஆதரமாகச் சமர்ப்பித்து, அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி மூன்று பேர் உயர் நீதிமன்றத்திடம் மனுச் செய்திருந்தனர்.

அந்த மனுக்களை விசாரித்த நீதிமன்றம், எஸ்.பி.திஸாநாயக்காவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடியதாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபரைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கான்ஸ்டபிள் தற்கொலை முயற்சி !

கொழும்பு,ஏப்.22

வவுனியாவில் பொலீஸ் நிலையத்தில் பணியாற்றிவந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா பொலீஸ் நிலையக் காவலரணில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த வெர

(14ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். சிறையிலிருந்து தப்பிய கைதி முக்கிய கொலைச் சந்தேகநபர்

யாழ்பாணம்,ஏப்.22

யாழ். சிறையிலிருந்து அண்மையில் தப்பி ஓடிய கைதி குடாநாட்டில இடம்பெற்ற ஒரு முக்கிய படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச சந்தேகிக்கப்படுபவர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப கைதி கடந்த 8ஆம் திகதி சிறைச்சாலை சுற்றுமதிலில் ஏறிக் குதித்துத் தப்பி ஓடி விட்டார். சிறைச்சாலைக் காவலர்களும, பொலீஸாரும் கடந்த சில வாரங்களாக அவரைத் தேடிவருகின்றனர்.

கிட்டினன் நிஷாந்தன் என்ற இந்தக் கைதி, தப்பி ஓடிய சில தினங்களின் பின்னர் நெல்லியடிப் பகுதியில் உளள சினிமாத் திரையரங்கு ஒன்றில் படம் பார்த்துக்கொண்டிருந்த சமயம் சிறைச் சாலைக் காவலர்களால் கண்டுபிடிக்கப் பட்டார். எனினும், காவலர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு அங்கிருந்து அவர் தப்பிவிட்டார்.

கடந்த 98ஆம் ஆண்டு நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அங்கு வைத்துக் கோரமாகக் கொலை செய்யப்பட்டு துண்டிக்கப்பட்ட அவரது தலை யாழ். நகரப் பகுதியில் கொண்டுவந்து வீசப்பட்ட பரபரப்பான சம்பவத்தில் இந்தக் கைதி ஒரு சந்தேக நபராக அடையாளம் காணப் பட்டிருந்தார் என்றும் -

நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அவர், திருட்டுக் குற்றம் தொடர்பாக மீண்டும் கைதாகிச் சிறைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார் - என்றும் கூறப்படுகிறது.

பிரஸ்தாப கைதியைப் பொலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர். இவரைத்தேடி நகரில் உள்ள கட்சி அலுவலகம் ஒன்றிலும் தேடுதல் நடத்தப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது.(ஐ-7)

# வடமேல் மாகாணத் தேர்தலின் பிரசாரங்கள் நேற்றுடன் முடிவு

நாளைமறுதினம் நடைபெறவிருக்கும் வடமேல் மாகாணசபைத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தன.

இதன்படி, இன்றுமுதல் தேர்தல் நடைபெறும் தினம் வரை எவரேனும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முறை வடமேல் மாகாணசபைத தேர்தலில் 52 ஆசனங்களுக்கு 12 அரசியல் கட்சிகள்,7 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 803 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

குருநாகல் மாவட்டத்தில் 10 லட்சத்து 89 ஆயிரத்து 482 வாக்காளர்களும், புத்தளம் மாவட்டத்தில் 4 லட்சத்து 57 ஆயிரத்து ஏழு வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (எ-க)

# பிக்கு எம்.பிமார் ஊர்வலமாக நாடாளுமன்றம் செல்வார்கள்

இன்று நாடாளுமன்றுக்கு அருகில் உள்ள புத்த விஹாரையில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னரே ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு எம்.பிக்கள் நாடாளுமன்றுக்குள் பிரவேசிப்பர் என அதன் செயலாளர் அத்துருலிய தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

பெருந்திரளாகக் கட்சியின் ஆதரவாளர்களும் புத்த பிக்குகளும் நாடாளுமன்ற வாயிற்கதவு வரை சென்று நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப் பட்ட புத்த பிக்குகளை வழியனுப்புவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தர்மராஜ்யத்தை உருவாக்கும் நோக்குடன் புறப்பட்ட இந்த புத்த பிக்குகளின் அசைக்க முடியாத நம்பிக்கை நிறைவேறும் காலம் வெகு தூரத்தில் இல்லை என றும் அவர் கூறினார். (எ-க)

## ஜீ.சீ.ஈ. பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.இந்துமகளிர் கல்லூரி மூலம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் வைத்து வழங்கப்படும் என கல்லூரி அதிபர் திருமதி ஜெயராசா அறிவித்துள்ளார். (எ-ரி)

# நெல்லியடிப் பொலீஸ் பிரிவில் பல திருட்டுச் சம்பவங்கள்

கரவெட்டி,ஏப்.22

நெல்லியடி பொலீஸ் நிலையப் பிரிவில் கடந்த செவ்வாக்கிழமை இரவு பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம பெற்றுள்ளன.

கரவெட்டி, சோனப்பு வீதியில் உள்ள வீடொன்றில் இரவு வேளையில் ஜன்னல் கம்பிகளை வளைதது உள்நுழைந்த திருடர்கள் அங்கு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 18 பவுண் பெறுமதியுடைய தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். வெற்றிவேல் குமாரகுலசிங்கம் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி, கன்பொல்லை வீதியில உள்ள வீடொன்றில் பின்னிரவு 3.30 மணியளவில் வீட்டின் கதவுகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், வீட்டில் இருந்தவர்களைக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்திவிட்டு அலுமாரியில் இருந்த தாலிக்கொடி மற்றும் பணம் என்பற்றைத் திருடிச்சென்றுள்ளனர். திருடர்கள் முகமூடிகளை அணிந்து வந்ததாகத் தெரிவிக்கபபட்டுள்ளது. சின்னத்தம்பி விக்னேஸ்வரன் என்பவரது வீட்டிலேயே இச்சம பவம்இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி பழைய வைத்திய சாலை வீதியில் உள்ள வீடொன்றினுள் உள்நுழைந்த திருடர்கள் வீட்டில உள்ளவர்களின் தாக்குதலை அடுத்து ஓடித்தப்பியதுடன் வீட்டுக் கூரைக்கும் சேதம் விளைவித்துள்ளனர். வெலிசசோர் சந்தியாப்பிள்ளை என்பவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த மூன்று சம்பவங்கள் தொடர்பாகவும் நெல்லிடியப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக்காலமாகக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத தக்கது. (ஐ-10-70)

## திருடர் நடமாட்டம்; மக்கள் நித்திரையின்றி விழிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22

அரியாலைப் பகுதியில் பரவலாகத் திருடர் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக முன்னிரவு வேளைகளில் வீடுகளுக்குள் நுழையும் திருடர்களால் தாம் அன்றையதினம் நித்திரையின்றி விழித்திருக்க வேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டது.

புறூடி ஒழுங்கை, பாரதி வீதி, சின்னக்கிணற்றடி ஒழுங்கை மற்றும் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தைச் சூழவுள்ள பகுதிகள், ஸ்ரான்லி முன் ஒழுங்கை ஆகிய பகுதிகளிலேயே கடந்த சில வாரங்களாக இரவு வேளைகளில் திருடர் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நேர்முகப் பரீட்சை

குருநகர்,ஏப்.22

யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் கடலக தொழில்நுட்பப் பயிற்றி நெறியைக் கற்பதற்கு விண்ணபித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், கிராம அலுவலரது வதிவிடச் சான்றிதழ் ஆகியவைகளுடன் சமுகம் கொடுக்க வேண்டுமென கல்லூரி அதிபர் இ.செபஸ் தியாம்பிள்ளை அறிவித்துள்ளார். (எ-51)

# சிறுவயதிலிருந்தே நல்லன செய்யுங்கள்; நல்லனவையே சிந்தித்துச் செயற்படுங்கள்

## சுவாமி சைதன்யா புத்திமதி

யாழ்ப்பாணம்,ஏப்.22

இலங்கை சின்மியா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி ரமண சைதன்யா தமது இரண்டாவது நாள் தொடர் ஆன்மீகச் சொற்பொழிவை பஜனையுடன் ஆரம்பித்தார்.

ஆதிசங்கராச்சாரியார் இயற்றிய 'மன்னிப்பாயா' என்ற சமஸ்கிருத நூலின் நான்காவது சுலோகத்தோடு அவரது சொற்பொழிவு பிரவகித்தது.

நீங்கள் இளைஞனாக இருக்கும் போது பொதுவுடமைவாதியாக இருக்க வேணடும். ஆனால், முதுமையடையும் போதும் பொதுவுடமை வாதியாக இருநதால் உங்களுக்குத் 'தலையே இல்லை' என்று தான் கருதவேண்டும். இறை வணக்கம் எதற்காக? எந்தவயது முதல் இறைவணக்கம்? என்றெல்லாம் கேட்கலாம். இளைஞனாக இருக்கும் போது ஆழ்ந்த பக்தியை வெளியிட்டால் வீட்டார்கள் பயந்து 'தம்பி! இந்த வயதில் ஏன் இதெல்லாம்? வயதாகச் செய்யலாமே!' என்று புத்திமதி கூறுவதைக் காண முடிகின்றது. இது மிகவும் விந்தையான கருத்தாகும். இளமைக் காலத்தில் நல்ல சிந்தனை இல்லை என்பது கவலைக்குரியதாகும். சிறுவயது முதலே இறை பக்தியுணர்வு இல்லாமல் வளர்வது வரைபடம் இல்லாமல் பிரயாணம் தொடங்குவது போலத்தான்.

உதாரணமாக, நீங்கள் கொழும்பிற்கு காரிலே செல்ல முடிவு செய்து விட்டீர்கள். காரோட்டியும் நீங்களே, கொழும்புப் பயணம் உங்களுக்குப் புதிது. வழி சரியாகத் தெரியாது. வரைபடமும் இல்லை. சந்திக்குச் சந்தி வழிகேட்க நேரிடும். சில வேளைகளில் வழிகாட்ட ஆளோ கிடையாது போய்விடும். வழிதவறி எங்கோ போய் விடுவீர்கள். இதுபோலத்தான் வாழ்க்கைப் பயணமும் வரைபடம் இல்லாது பயணிக்கவே முடியாது.

### வாழ வழி காட்டும் தர்ம சாஸ்திரங்கள்

எப்படி வாழ்க்கையை வாழவேணடும் என்று வழிகாட்டுபவை தர்மசாஸ்திரங்கள். எனவே, சிறுவயதிலிருந்தே சமயநூல்களைப் படிக்க வேண்டும். ஆன்மீக விழுமியங்கள் இளமையிலேயே சிறுகச்சிறுக சேரவேண்டும். அவ்வாறு வழி நடந்தால்தான் காமம், கோபம் போன்றவை எழும்போது என்ன செய்யவேண்டும் என்பது புலனாகும். சடங்குகள், சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் என்பவை பற்றி இளவயதிலேயே அறிந்திருக்க வேண்டும். ரியூசன், தொலைக்காட்சி, கிரிக்கெட் போட்டி என்றெல்லாம் ஒரேயடியாக அலைவதில் பயனேதும் இல்லை. வாழும்வகையினை நன்குணர்ந்து வாழ முயற்சிக்க வேண்டும். கர்மம், ஆணவம் என்பன எம்மைத் தவறு செய்யவைக்கின்றன.

நாம் இளமையை இனிமையாகக் கழித்து சுவைத்துவிட்டு முதுமையில என்னதான் செய்யமுடியும்? முதுமையில் புலன்கள் பலமிழந்து வீரியம் இழந்து பலவீனமாகின்றன. எமது அன்பர்கள் பிரிகின்றனர். மீசை நரைததாலும் ஆசை கூடுவதைக் காணலாம். மோகம், தேவையற்ற ஆசாபாசம் என்பன எம்மை ஆட்டுவிக்கின்றன. அப்போதும் நாம் ஒரு கணம்கூட தியானிப்பதில்லை.

இது சரியா?

### எப்போது வயதாகிறது

வயதாகிவிட்டது என்பதற்கு அடையாளம் என்ன? எப்போது பழையகாலம் பற்றி நெடுகப் பேசுகின்றோமோ அப்போது வயதாகிவிட்டது எனலாம். இளைஞர்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கிறார்கள். ஆனால், முதியவர்களோ பழைய காலம் பற்றியே பேசுகின்றார்கள். அதுமாத்திரமா? உடல் உபாதைகள் பற்றி ஒரேயடியாகப் புலம்புவார்கள். மூப்பு இயல்பானது. வியாதிகள் பற்றியே எ போதும் எண்ணக்கூடாது. நோயைப்பற்றி அடிக்கடி கதைக்கக் கூடாது. இதுமாத்திரமா? மனதிலே முன்பு செய்தவை பூதாகாரமாக வெளிபட்டு நொந்தரவு செய்யும். என்பாவம என்னை என்ன செய்யுமோ என்று குற்ற உணர்வு குத்திக்கொண்டே இருக்கும். ஆனால், நல்லகாரியங்கள் செய்திருந்தால் இப்படி மனம் சஞ்சலப்படாது. அவை மனத்திருப்தியை, மன மகிழ்வைத்தரும் மனச்சாட்சியை யாருமே ஏமாற்றமுடியாது.

உலகம் உங்களை நிராகரிக்கு முன்னர் நீங்கள் உலகத்தை நிராகரித்து விடுங்கள் என்று சுவாமிகள் முதியோர்களைக் கேட்டுக்கொண்டார்.

கிருகஸ்தத்திலிருந்து முதியோர்கள் விடுபட வேண்டும். பிள்ளைக்குப பிள்ளை பிறந்தவுடன் கிருகஸ்தம் முடிவடைகின்றது. இறைபக்தியில் ஈடுபட்டு உலகத்தை விடுவதற்குப் பழகவேண்டும். இறைவா! இந்த முதுமையிலாவது வழிபட அருள்செய்! என்று மனமுருகி வேண்ட வேண்டும். எமது சுற்றத்தவர், நண்பர்கள் என்று ஒவ்வொருவராக மேலுலகம் போகப் போக மரணபயம் ஏற்படுகின்றது. அச்சமும் தவிப்பும் தோன்றுகின்றன.

சின்ன வயதிலிருந்தே உலக விடுதலை பற்றி கற்றிருந்தால் இந்தப் பயம் முதுமையில் ஏற்பட்டிருக்காது. உலகத்தில் உழலுவதே துன்பத்திறகுக் காரணம். இறைவனைப் பிடிக்க முயலவேண்டும். திடீரென முதுமையில் இதையெல்லாம் தொடங்கமுடியாது. சிறுவயதுப் பழக்கம் முக்கியமாகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பாரதியாரின் 'வேடிக்கை மனிதன்' பாடலைச் சுவாமியார் உணர்ச்சியோடு பாடினார்.

என்னால் இப்போது ஒன்றுமே செய்ய முடியாத பாவியாகிவிட்டேன் என்று முதுமையில் வருந்துவது ஏன்? மனம் தூய்மையாக இருந்தால் ஆனந்தம் உண்டாகும் உலகம் நிறைவில்லாதது.

இச்சந்தப்பத்தில் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனையிலிருந்து சுவாமிகள் மேற்கோள் காட்டினார்.

"அகமுகப்படு அப்போதே ஆனந்தம்" என்ற யோகர் சுவாமிகளின் அருள் வாக்கை எடுத்து சுவாமிகள் விளக்கினார். மனிதன் தன்னுடைய கருமங்களைச் செவ்வனே செய்யவேண்டும்.

நித்திய கருமம், நைமித்திய கருமம், விறுதகர்மம், காமியம், நிற்காமியம் என்று கருமங்களைச் செய்ய வேண்டும். நாம் ஈடேறவேண்டுமானால் சிறுவயதிலிருந்து நல்லவற்றைச் செய்யவேண்டும். முதலில் நல்ல நூல்களைக் குருவின் மூலம் கற்கவேண்டும். பின் நன்கு சிந்திக்கவேண்டும். புரிந்ததைக் குறித்து தியானிக்க வேண்டும் இதுவே இறைவனை அடைய நல்ல வழி - என்றார்.

(தொகுப்பு: சுடர் மகேந்திரன்).

# இப்படியும் ஓர் விதண்டாவாதம்!

**தற்போதுள்ள தேர்தல் நடைமுறைகளுக்கு அமையத் தேர்தல் முடிவுகளின்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது நகைப்புக்கிடமானது தான். ஆனால, அதை வைத்து விதண்டாவாதம் பேசுவது அதைவிட நகைப்புக்கிடமானது. 'திவயின' வார இதழில் வெளயான தேர்தல் முடிவுகள் குறித்த ஆய்வின் ஒரு பகுதி இது.**

கடந்த பொதுத் தேர்தலில் 3071 வாக்குகளுக்கு இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது பதுளை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது. பதுளை மாவட்டத்தில் ஐ.தே. கட்சிக்கு ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 705 வாக்குகளும், ஐ.ம.சு. முன்னணிக்கு ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 634 வாக்குகளும் கிடைத்துள்ளன. இதன்படி, ஐ.தே.கட்சிக்கு 3 ஆயிரத்து 71 வாக்குகள் மட்டுமே மேலதிகமாகக் கிடைத்துள்ளன. பதுளை மாவட்டத்திலிருந்து 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதில் 5 பேர் ஐ.தே.கட்சி சாரபிலும் 3 பேர் ஐ.ம.சு.முன்னணி சார்பிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதன்படி, 3 ஆயிரத்து 71 வாக்குகளை ஐ.தே.க. பெற்றதால் மேலதிகமாக 2 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

மொனறாகலை மாவட்டத்தில் ஐ.ம. சு.முன்னணி 1,17,456 வாக்குக்களையும் ஐ.தே.கட்சி 71,067 வாக்குக்களையும் பெற்றுள்ளன. இதன்படி, ஐ.தே. கட்சியைவிட ஐ.ம.சு.முன்னணி 46,344 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றுள ளது. அந்த மாவட்டத்தில் ஐ.ம.சு. முன்னணி சார்பில் மூவரும் ஐ.தே. கட்சி சார்பில் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பதுளை மாவட்டததில் 3071 மேலதிகமாகக் கிடைத்த வாக்குகளால் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதேசமயம, மொனறாகலை மாவட்டத்தில் மேலதிகமாக 46,344 வாக்குகள் கிடைத்தும் மேலதிகமாகக் கிடைத்ததோ ஓர் ஆசனம் மட்டுமே.

காலி மாவட்டத்தில் ஐ.தே.கட்சிககுக் கிடைத்த வாக்குகளைவிட, ஐ.ம. சு.முன்னணிக்கு 93,986 வாக்குகள் கூடுதலாகக் கிடைத்தன.

ஆனால், பதுளை மாவட்டத்தில் 30,71 மேலதிக வாக்குகளுக்கு 2 மேலதிக ஆசனங்கள் கிடைத்தபோது காலி மாவட்டத்தில் 93,986 மேலதிக வாக்குகள் கிடைத்தும் அந்த முன்னணிககு 2 மேலதிக ஆசனங்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

(இதுவரை தரவுகள் ஆராயப்பட்டன இனி வருவது அப்பட்டமான விதண்டா வாதம்)

நாடளாவிய ரீதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 6,33,654 வாக்குகள் கிடைத்துள்ளன. தேசிய ஹெல உறுமயவுக்கு 5,52,724 வாக்குகள் கிடைத்துள்ளன. வித்தியாசம் 81,130 வாக்குகள் மட்டுமே. இருப்பினும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிடைததுள்ளனர். ஆனால், தேசிய ஹெல உறுமயவுக்கு 9 ஆசனங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இரு கட்சிகளுககும் கிடைத்த வாக்குகளின் வித்தியாசம் 81,130. ஆனால், கிடைத்த ஆசனங்களின் வித்தியாசம் 13 ஆகும். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த வாக்குகளை கிடைத்துள்ள ஆசனங்களால் பிரிக்கும்போது சராசரியாக 28,802 வாக்குகளுக்கு ஓர் உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 28,802 வாக்குகளைச் சராசரியாகப் பெற்று 22 நாடாளுமன்ற ஆசனங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிடைக்குமானால் 42,23,970 வாக்குகளைப் பெறற ஐ.ம.சு.முன்னணிக்கு 146 ஆசனங்களும் 5,52724 வாக்குகளைப் பெற்ற தேசிய ஹெல உறுமயவுக்கு 19 ஆசனங்களும் கிடைத்திருக்கவேண்டும்.

*குறிப்பு:*

இனவாதக் கண்ணோடு ஆய்வு செய்பவர்களுக்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் தான் தேவைப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டவர்களில் 20 பேர் அந்தந்த மாவட்ட மக்கள் அளித்த வாக்குகளின் அடிப்படையில் அந்தந்த மாவட்டங்களிலிருந்து தேர்ந தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதைக் கூட ஆய்வாளர் மறைத்துவிட்டார். யாழ்ப்பாண மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட்டு அந்த மாவட்டங்களில் கிடைதத எச்ச சொச்சங்களை நாடளாவிய ரீதியில் ஒன்று சேர்த்த எண்ணிக்கையே தேசிய ஹெல உறுமயவுக்கு கிடைத்த மொத்த வாககுகளாகும் அந்த வாக்குகளை வடககு - கிழக்குவாழ் மக்கள் தன்னாட்சி உரிமைக்காக அளித்த வாக்குகளுடன் ஒப்பிடுவது அபத்தமானது. மேலும், யாழ். மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் செல்லுபடியான வாக்குகள் 2,82,026 ஆகும். இங்கிருந்து 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சராசரியாக ஓர் உறுப்பினருக்கு 31,336 வாக்குகள வீதம் அளிககப்பட்டுள்ளது. ஆனால், அதே தேர்தல் விதிமுறைகள் தான் 18,612 வாக்குகளைப் பெற்ற டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யபட வழிவகுத்தது என்பதை ஆய்வாளர் மறந்துவிட்டனர் போலும். ▲

**கஜனி**



இந்தியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாக்குப் பதிவின்போது கள்ளவாக்குப் போட வந்து சிக்கிய ஒருவர் பொலீஸாரின் பிடியில்.

# வாக்குப்பதிவைப் பாதித்த குடிதண்ணீர் விநியோகம்!

ஐதராபாத்,ஏப்.22

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் நாடாளுமன்றத் தேர்தலோடு சட்ட சபைக்கும் தேர்தல் நடந்தது. முதல் கட்டமாக 21 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் 147 சட்டசபைத் தொகுதிகளுக்கும் நேற்று முன்தினம் வாக்களிப்பு நடந்தது. பழைய ஐதரபாத் நகரில் காலை 10 மணி வரை யாரும் வாக்களிக்க வரவில்லை.

மொகல்பூராவில் உள்ள 80ஆவது வாக்குச் சாவடியில் 10 மணிவரை ஒருவாக்குக்கூடப் பதிவாகவில்லை. சார்மினார் சட்டசபைத் தொகுதிக்கு உட்பட்ட மெக்பப்சவுக் வாக்குச் சாவடியில் மொத்தம் உள்ள 949 வாக்குகளில் காலை 10 மணிவரை 30வாக்கு மட்டுமே பதிவாகியிருந்தன. இதில் அனைவரும் ஆண்கள்.

யாருமே வாக்குப்போட ஆர்வம் காட்டாததால் அரசியல் கட்சிப்பிரமுகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக ஒவ்வொரு வீடாகச் சென்று வாக்குப் போடவரும்படி வாக்காளர்களை அழைத்தனர். ஆனால், யாரும் வரவில்லை.

ஏனெனில், பழைய ஐதராபாத் நகரில காலை 7 மணிமுதல் 10மணிவரை குடிதண்ணீர்ப் விநியோகம் செய்யப்பட்டது. ஏற்கனவே குடிதண்ணீர் பஞ்சத்தால் அவதிப்பட்டுவரும் பொதுமக்கள் அதைப் பிடிப்பதை விட்டுவிட்டு வாக்குப போடவர விரும்பவில்லை. குடிதண்ணீர் விநியோகம் நின்றபிறகுதான் பெண்கள் வாக்களிக்க வந்தனர்.

(ஒ-க)

உலக அரங்கில்

# கடன் சொல்லி மனுத்தாக்கல் செய்ய முயற்சித்த சுயேச்சை வேட்பாளர்!

கடலூர்,ஏப்.22

தமிழகத்தின் கடலூர் மாவட்டம் மங்களூர் தொகுதியில் போட்டியிட கட்டுப பணம் செலுத்துவதற்கு பணம் கொண்டுவராததால், கடன் சொல்லி மனுத்தாக்கல் செய்யமுயன்றார் சுயேச்சை வேட்பாளர் கே.பத்மராஜன (வயது42) சேலம் மாவட்டம் மேட்டூரைச் சேர்ந்தவர் இவர். ஹோமியோபதி மருத்துவரான பத்மராஜன் 96ஆம் ஆண்டு முதல் பல தேர்தல்களில் வேட்புமனுத்தாக்கல் செய்து வருகிறார். இந்த மக்களவைத் தேர்தலில் லக்னோ தொகுதியிலும் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிடுகிறார். தருமபுரி தொகுதியிலும் இவர் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

மங்களூர் தொகுதி இடைத்தேர்தலிலும போட்டியிட விரும்பிய அவர், மங்களூர் தொகுதி தேர்தல் அதிகாரியான மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அதிகாரி மாயழகுவிடம், தனது வேட்பு மனுவை அளித்தார்.

கட்டுப்பணமான ரூ.2500 (இந்தியப் பணம்) எங்கே என்று கேட்டதற்குத் தற்போது பணம் இல்லை. ஊருக்குச் சென்றுவந்து பணம் செலுத்துகிறேன் என்றார். அதற்குத் தேர்தல் அதிகாரி சம்மதிக்கவில்லை. கட்டுப்பணத்தைச் செலுத்தினால் மட்டுமே வேட்பு மனுவைப் பெற முடியும் என்று கூறிவிட்டார்.

வேட்புமனுவை மட்டும் பெற்றுக் கொண்டு பற்றுச்சீட்டு கொடுங்கள் என்று பத்மராஜன் கேட்டார். தொகை செலுத்தினால் அதற்கு உரிய பற்றுச் சீட்டு அளிக்கப்படும் என்றார் அதிகாரி.

மங்களூர் தொகுதி தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. எனவே, கேரளநாயர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படும் பத்மராஜன், இத்தொகுதியில் போட்டியிட முடியாது என்று அதிகாரி கூறியதற்கு, தாம் தாழ்த்தப்பட்டவர்தான் என்று சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பித்தார் அவர். இந்நிலையில், 15 நிமிடம் அவர்களுக்குள் வாக்குவாதம் நடைபெற்றது. இப்போது வேட்பு மனுவைப் பெற்றுக்கொள்ளுங்கள் பின்னர் மனுகள் பரிசீலனையின்போது வேண்டுமானால் தள்ளுபடி செய்யுங்கள் என்று பத்மராஜன் வாதிட்டார். எனினும், கட்டுப்பணம் செலுத்தினால்தான் வேட்பு மனுவைப் பெறமுடியும் என்று தேர்தல் அதிகாரி உறுதியாகச் சொல்லி விட்டதால், வேறு வழியின்றி பத்மராஜன் வெளியேறினார். (ஒ-க)

# டாக்டர் ராமதாஸுக்கு எதிராக ரஜனிகாந்த் ரசிகர்கள் மனு!

புதுடில்லி,ஏப்.22

தேர்தல் விதிமுறைகளை மீறியதாக, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி டில்லி மாநில ரஜனி காந்த் தலைமை நற்பணி மன்றத்தின் சார்பில் தேர்தல் ஆணையத்தின் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

மன்றத் தலைவர் எஸ்.கே.பாண்டியன் அளித்துள்ள அந்த மனுவில் கூறியிருப்பதாவது:-

மதுரையில் கடந்த 2ஆம் திகதி பா.ம.கவினர் நடத்திய தாக்குதலில் ரஜனி ரசிகர்கள் பலர் படுகாயமடைந்தனர். இதுதொடர்பாக தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் உடனடியாகப் புகார் செய்யப்பட்டது. ராமதாஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது பொலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ராமதாஸுக்குக் கறுப்புக் கொடி காட்ட முயன்ற ரஜினி ரசிகர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டத்துடன், அரிவாள், உருட்டுக்கட்டை போன்ற ஆயுதங்களுடன் பா.ம.கவினர் தயாராக வந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விரிவான அறிக்கையை தலைமைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவிட்டதாக தமிழகத் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தேர்தல் நடத்தை விதிகளை மீறிச் செயற்பட ராமதாஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஒ-க)

# ஈராக்கில் நேற்றும் குண்டுகள் வெடித்தன!

## உறைந்துபோய் நிற்கிறது அமெ. இராணுவம்



எரிந்த வாகனம்

பாஸ்ரா,ஏப்.22

ஈராக் நாட்டில் சதாம் ஆட்சி முடிவுக்கு வந்தபிறகு அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அமெரிக்க கூட்டுப் படையினரின் முகாம்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தங்கி இருக்கும் ஹோட்டல்கள் குறி வைத்துத் தாக்கப்படுகின்றன.

மேற்கு பக்தாத் நகரில் அமெரிக்க படையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைச்சாலை மீது நேற்று முன்தினம் திடீரென பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 21 கைதிகள் பலியானார்கள்; 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்தப் பரபரப்பு அடங்கும் முன்பு ஈராக்கில் தெற்கு பகுதியில் உள்ள பஸ்ரா நகரில் நேற்றுக் காலை 3 பொலீஸ் நிலையங்கள் கார்க் குண்டுகள் மூலம் தகர்க்கப்பட்டன. அடுத்தடுத்து 3 இடங்களில் இந்தக் குண்டு வெடிப்புகள் நடந்தன.

பஸ்ரா நகரில் இருந்து கிந்தர் கார்தன் நகருக்கு ஒரு மினி பஸ்ஸில் குழந்தைகள் சென்றனர். போகும் வழியில் பொலீஸ் நிலையத்தில் வெடித்த குண்டு, குழந்தைகள் சென்ற பஸ்ஸையும் தாக்கியது.

இதில் ஏராளமான குழந்தைகள் பலியானார்கள். பொலீஸ் நிலையத்தில் இருந்த பொலீஸாரும் பலியானார்கள். நேற்றுமாலை வரை 61 பேரின உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. 200 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். பாஸ்ரா நகர் பிரிட்டிஷ் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அவர்கள் உடனடியாக விரைந்து செயற்பட்டு படுகாயம் அடைந்த பொலீஸார், குழந்தைகள் மற்றும் பொதுமக்களை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இறந்தோரின் எண்ணிக்கை மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சதாமை விசாரிக்க நடுவர் நீதிமன்றம்

பக்தாத்,ஏப்.22

அமெரிக்கப் படையினரிடம் பிடிபட்டிருக்கும் சதாம் ஹுசைனை விசாரிக்க நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் அடங்கிய நடுவர் நீதிமன்றத்தை ஈராக்கியத் தலைவர்கள் நிறுவியுள்ளனர்.

இந்நீதிமன்றத்தின் தலைவராக சலீம் சலாபி என்பவர் பொறுப்பு வகிப்பார். அமெரிக்காவில் படித்த இவர், ஈராக் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவரின் மருமகன். ஈராக்கின் ஆளும் சபை இவரை நீதிமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளது. இதற்கான ஆணையை அமெரிக்க உயர் நிர்வாகி போல் பிரீமர் வழங்கியுள்ளார்.

ஏழு நீதிபதிகளும் 4 சட்டத்தரணிகளும் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்.

இந்நீதிமன்றத்துக்கென சுமார் 700 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சதாமின் படை உறுப்பினர்கள் மீதும் இந்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

விசாரணை தொடங்கும் திகதி



இனனும் முடிவுசெய்யப்படவில்லை. கடந்த டிசெம்பரில் பிடிபட்ட சதாம், பக்தாத் நகரிலோ அதன் சுற்றுப்புறத்திலோ மறைவிடத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

சதாம் மற்றும் அவரது முன்னாள் அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்படவுள்ள நிலையில் அதிக நீதிபதிகள் வேண்டுமென்றாலும் அமர்த்தப்படுவார்கள்.

இதற்கென நியமிக்கப்பட்டுள்ள நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் சர்வதேச சட்டம், போர் சமயத்தில் நிகழும் குற்றங்கள் மற்றும் மனிதத்துக்கு எதிரான கொடுமை, ஆகியவற்றில் சிறப்பு நிபுணத்துவம் பெற்றவர்கள் என்று அமெரிக்கா கூறுகிறது.

# 18 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின் அணு ஆயுத எதிர்ப்பாளர் விடுதலை



டெல் அவிவ்,ஏப்.22

இஸ்ரேலின் அணு ஆயுதத் தயாரிப்புக்கு எதிராகப் போராடி வந்தவரான மோடெசை வனுனு 18 வருட சிறை வாழ்வின் பின் நேற்று விடுதலை செய்யப்பட்டார். 1986ஆம் ஆண்டு பிரிட்டனின் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வனுனு வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் இஸ்ரேலின் அணு ஆயுதத் தயாரிப்புக் குறித்து செய்தி வெளியிட்டது.

இதனையடுத்து, நாட்டின் இரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது இஸ்ரேலிய அரசு. அணு சக்தித் தொழில் நுட்ப வியலாளரான வனுனு, அணு ஆயுதங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பி வந்தவராவார். (ஒ)

# இஸ்ரேல் இராணுவத் தாக்குதலில் காஸாவில் 5 இளைஞர்கள் பலி!

ஜெருசலேம்,ஏப்.22

காஸாவில் இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நேற்று இடம் பெற்ற மோதலில் பலஸ்தீன இளைஞர்கள் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர்.

'நிஸானிட்' என்ற யூதக்குடியிருப்பைச் சுற்றியுள்ள பலஸ்தீனர்களின் கட்டடங்களை 'புல்டோஸர்' மூலம் தகர்க்க இஸ்ரேலியப் படையினர் முயன்றனர் என்றும் -

அப்போது அவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்தே மோதல் ஆரம்பமானதாகவும் - கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் 'நிஸானிட்' யூதக்குடியிருப்பை இலக்குவைத்து ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனைச் சுற்றியுள்ள கட்டடங்களில் மறைந்திருந்தே பலஸ்தீனத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துகின்றனர் என்று கூறியே இஸ்ரேல் இராணுவம் அக்கட்டடங்களைத் தகர்க்க முற்பட்டது. அந்த வேளையிலேயே மோதல் வெடித்தது. (ஒ)

இஸ்ரேலியக் இராணுவ வாகனத்துக்கு கல்வீசும பலஸ்தீனச் சிறுவன். →



# ஆனைக்கோட்டை வீட்டில் நகைகள், பணம் திருட்டு!

நவாலி,ஏப்.22

ஆனைக்கோட்டையில் நள்ளிரவு வேளை ஓடுபிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியுடைய பெரும் எண்ணிக்கையான நகைகளை யும் பல லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகரச்சம்பவம் ஆனைக்கோட்டை சிவன் கோவிலடியில் வசிக்கும் புண்ணியமூர்த்தி துரைசிங்கம் என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 16ஆம் திகதி வெள்ளி இரவு வீட்டில் இருந்தோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை வீட்டுக் கூரை மீதேறி ஓடு பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அறையினுள் வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த நகைகளையும் சுமார் நாலரை லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் தேடி எடுத்து சாரத்திலும் சேட் ஒன்றிலும் பொதியாகக் கட்டி எடுத்துக்கொண்டு மீண்டும் கூரைவழியாகத் தப்பிச் சென்றார்கள் எனச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-100)

# ஒலிபெருக்கிப் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

வலி.மேற்கு,ஏப்.22

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக கிராம உத்தியோகத்தர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

பாடசாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அருகிலுள்ள வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களில் பாடசாலைகள், அலுவலகங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் அதிக ஒலியுடன் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. இரவுநேரங்களிலும் அதிகாலையிலும் மாணவர்கள், நோயாளர்கள் ஆகியோர்களுக்கு இடையூறாக ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆகவே, ஒலிபெருக்கிகளின் பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று அண்மையில் நடைபெற்ற வலி. மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கிராம உத்தியோகத்தரை தலைவராகக் கொண்டு சமுர்த்தி உத்தியோகத்தர், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர்களை உள்ளடக்கிய ஐவர் கொண்ட குழுவொன்றை அமைத்து ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கிராம உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். பிரதேசத்தின் அபிவிருத்தி மக்களின் தேவைகள பற்றியும் ஆராயப்பட்டது.

(ஒ-175)


## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் சித்திரை 12ஆம் நாள் 24.04.2004 சனிக்கிழமை பகல் 11.30 முதல் 1.26 மணிவரையுள்ள மிருகசீரிஷ நட்சத்திர கடக இலக்கின சுபமுகூர்த்த வேளையில்



எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**சிவகரன்**
(ஆசிரியர்,வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறைசெல்வி
**அமுதா**
(ஆசிரியை,கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் திருமணமண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் :- **25.04.2004** (ஞாயிறு) மணமகன் இல்லம்.
(நெட்டிலிப்பாய், கோண்டாவில் மேற்கு)

தங்கள் நல்வரவை நாடும்:

சிவானந்தம்-பார்வதிதேவி
சயந்தன்-சிவசக்தி
உதயகுமார்-சிவநந்தினி
சிவமோகன்.

அன்னமுத்து
இராமநாதன் - நாகேஸ்வரி

(30949)


## அறிவித்தல்

மீசாலை, வங்களா வீதி, வாகையடிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள 3½ பரப்பு விசாலங்கொண்ட காணியானது எனது கட்சிக்காரி சிவநாதன் பெண் செல்வமலரின் பிள்ளைகளுக்குரிய காணியாகும்.

இக்காணியில் குறித்த செல்வமலர் குடும்பத்தினர் குடியிருந்து வருகிறார்கள். எனவே இக்காணியை எவரும் எவ்விதத்திலும் கொள் வனவு செய்யவேண்டாமென எனது கட்சிக்காரி குறித்த செல்வ மலரின் அறிவுறுத்தலின் பிரகாரம் அறியத்தருகிறேன்.

இவ்வாதனம் தொடர்பாக மிகவிரைவில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது என்பதனையும் அறியத்தருகிறேன்.

த.வேலாயுதம்,
சட்டத்தரணி
சாவகச்சேரி.

(31130) (24-13-16)



# ஏழாலை பெரிய தம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் விழாச் சிறப்பிதழ் - 22.04.2004





## "ஆச்சி நான் பொங்கலுக்குப் போகப்போகிறேன் நீயும் வா"

### ஆலய அற்புத வரலாற்றுச் சிறப்பு



அற்புதச் சிறப்புக்களோடு விளங்கும் பெரியதம்பிரான் ஆலய வரலாற்றுப் பெருமைகளை நோக்கும் பொழுது மருத்தனா உடையார் பெரிய செல்வந்தர். அவரது மகன் கெங்கையா. பரம்பரையாக இருந்துவந்த செல்வம் கரைந்து கெங்கையா வறுமையில் வாடினார். கெங்கையாவின் வறுமை அவரை ஊரைவிட்டே துரத்தி விட்டது. அநுராதபுரத்தில் குடியேறினார்.

**அருமையான கனவு**

இவரது குலதெய்வம் பெரியதம்பிரான்தான். ஊரைவிட்டுப் பிரியும்போது குலதெய்வத்தை விட்டுப்பிரிய நேர்ந்ததே என்றொரு தாக்கம் கெங்கையாவினுடைய உள்ளத்தில் குடிபுகுந்தது. ஒருநாள் இரவு கெங்கையா அருமையான ஒரு கனவு கண்டார். சோதிமயமான ஒருவர் தோன்றி "இன்று பெரியதம்பிரான் கோயில் பொங்கல்" என்று சொல்லி மறைந்துவிட்டார். துடி துடித்து எழுந்தார் கெங்கையா. தாயை எழுப்பி தான் கண்ட கனவை ஆனந்தப்பட்டுக் கூறினார்.

"ஆச்சி நான் பொங்கலுக்குப் போகப்போகின்றேன் நீயும் வா" என்று அழைத்தார். போக்குவரத்திற்கு மோட்டார் வண்டியோ புகையிரதமோ இல்லாத காலம் எப்படிப் போவது? "மகனே வறுமையால் வாடித் தேசாந்திரியாகப் புறப்பட்ட நாம், அதே வறுமைக் கோலத்துடன் எமது ஊருக்குச் செல்ல நான் விரும்பவில்லை" என்று பதில் அளித்தார் தாய்.

**வந்தார் பெரியவர்**

அன்றிரவே பொங்கல் நடைபெறும் இடத்தின் தூரமோ 125மைல்கள். "சரி அப்படியானால் நீங்கள் இங்கேயே இருங்கள். நான் பொங்கலுக்குச் சென்று வருகின்றேன்" என்று புறப்பட்டார் கெங்கையா. நொடிப்பொழுதில் உள்ளம் பெரியதம்பிரான் கோயிலை அடைந்துவிட்டது. அவரையும் அறியாத ஆவேசம் ஒன்று எழுந்தது. பெரிய இடிமுழக்கத்தோடும் மின்னலை ஒத்த வெடிச் சத்தத்தோடும் ஆகாய மார்க்கமாக வந்து பெரியதம்பிரான் கோயிலில் பொங்கல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே யாவரும் காணவந்து இறங்கினார். இதனைக் கண்ணுற்ற மக்கள் மத்தியில் ஒரு சலசலப்பு எழுந்தது. பெரியவர் வந்துவிட்டார் என்ற பேரொலி எல்லோர் நாவிலும் எழுந்தது.

**அரியதொரு ஆனந்தக் காட்சி**

ஆயிரக்கணக்கான மக்கள் பக்தி சிரத்தையோடு பொங்கலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு மத்தியில் பேரொளிப்பிழம்போடும் இடிமுழக்கத்தோடும் ஒருவர் வந்து தலமத்தியில் இறங்கித் திருநடனம் ஆடுவதனைத் தமது ஊனக் கண்ணாற்கண்டு களித்தனர் அங்கு பரந்து நின்ற சனக்கூட்டத்தினர். இவர் யார் என்ற கேள்வியே எல்லோர் உள்ளத்திலும் எழுந்தது.

அவரது உடையோ அழுக்கு நிறைந்த கந்தல் உடை, உள்ளமோ குறைவிலா நிறைவுபெற்ற பூரண உள்ளம். அங்குள்ள பெரியவர் ஒருவர் மிகுந்த பக்தி சிரத்தையோடு "சுவாமி தாங்கள் யார் என்பதை நாங்கள் அறியலாமோ? "என்று கேட்டார். "நான்தான் பெரியவன்" என்று விடை கிடைத்தது. அன்றிலிருந்து படிமாத்தானின் அருள் வாக்கின்படியே ஆலய வழிபாடுகளும் பொங்கல் பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

**கவிமாமணி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்**
(செயலாளர், ஈழத்தமிழர் சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்).

## ஏழாலைப் பதியமர்ந்த எங்கள் பெரிய தம்பிரானே!

சாடியிலே தங்கிச் சார்ந்தவரைக் காப்பவரே பெரியதம்பிரானே!
சங்கரனின் திருவுருவாய் இங்கெழுந்தவரே பெரியதம்பிரானே!
நாடிவரும் பக்தருக்கு நலமருளிக் காப்பவரே பெரியதம்பிரானே!
நாற்புறமும் மருதநிலம் சூழுகின்ற பதியமர்ந்தவரே பெரியதம்பிரானே!

சித்திரைத் திங்கள் சிறந்திடும் புதனில் கொடியேற்றம் பெரியதம்பிரானே!
சீர்மிகுந்த கனிகளுடன் பொங்கல் மடை பெரியதம்பிரானே!
நித்திய நேர்த்திகள் அக்கினிப் பிரவேசம் பெரியதம்பிரானே!
நிலா சோதயன் கன்னிமார் நாச்சிமார் வழிபாடு பெரியதம்பிரானே!

- அ.அனுசூயா

## பெரிய தம்பிரான் திருவருள் பெருகப் பிரார்த்திக்கின்றேன்

ஏழாலைப் பெரிய தம்பிரானின் திருவருள் பெருகிவருகிறது. நினைப்பதெல்லாம் நடக்கின்றது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்தச் சித்திரைப் பொங்கல் பெருவிழா வெகுசிறப்பாக நடைபெற ஒவ்வொரு அடியவரும் பெரியதம்பிரான் மீது வைத்திருக்கும் அளவிடமுடியாத நம்பிக்கைதான் காரணமாகிறது. "உருவேறத் திருவேறும்" என்பார்கள். அக்காட்சியை இன்று எங்கள் ஆலயத்தில் காணலாம். எல்லோருக்கும் எம்பெருமானின் திருவருள் பொலிவதாக.

- ஆலயப் பிரதம பூசகர்

## "ஏழாலையம்பதியில் எங்கள் குலதெய்வம்"

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே ஏழாலை, காரைநகர், சித்தன்கேணி, அராலி, மல்லாகம், அளவெட்டி, தொல்புரம், சுழிபுரம், உடுவில், மானிப்பாய், பலாலி, மீசாலை, சரசாலை, மாதனை, அச்சுவேலி, சிறுப்பிட்டி, புத்தூர், கும்பளை, கரவெட்டி, சிறுவிளான் பொலிகண்டி, நாகர்கோயில் போன்ற பல இடங்களில் பெரியதம்பிரான் கோயில் கொண்டு அருள்பாலித்து வருகின்றார்.

ஏழாலையம் என்ற வரலாற்றுச் சிறப்புமிகு பதியாகிய எங்கள் ஏழாலைக் கிராமத்திலே என்றும் "வேண்டுவார்க்கு வேண்டும் வரம்தரும் குலதெய்வமாக விளங்கிவரும்" பெரியதம்பிரானின் பொங்கற் பெருவிழா தாரணவருடம் இன்று வியாழக்கிழமை வெகுசிறப்பாக நடைபெறுகின்றது. அனைவருக்கும் அவனருள் பெருகப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்


**சித்திரைப் பொங்கல் பெருவிழா சிறக்க வாழ்த்துவோர்:**

**துர்கா பல்பொருள் வாணிபம்**
(பலசரக்குப் பொருட்கள்.
பாடசாலை உபகரணங்கள்.
அழகு சாதனப்பொருட்களின் உறைவிடம்)
ஏழாலை தெற்கு, மயிலங்காடு, சுன்னாகம்.
உரிமையாளர்: கே.மணிவண்ணன்
T.P.: 0777 291388

**காந்தி துவிச்சக்கரவண்டி திருத்தகம்**
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.
உரிமையாளர்: வே.கருணைநாதன்

(ஜ-34567) (24-13-16)

**ரூபன் எலக்ரோனிக்ஸ்**
இலத்திரவியல் உலகில் புதியதோர் முன்னோடியாக
இதோ சுன்னாகத்தில் .....!
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
உரிமையாளர்: ந.ஜெயரூபன்
ரி.வி. டெக். ரெலிபோன். மல்லி மெசின். போட்டோ கொப்பி மெசின் திருத்துநர்கள். T.P.:0777 172540

**சயன் உணவகம்**
(சிறந்த உணவுகளின் உறைவிடம்)
மல்லாகம் சந்தி, மல்லாகம்.
உரிமையாளர்: ரவி

**நிரோ தொலைத் தொடர்பு நிலையம்**
(போட்டோப் பிரதிகள், கவரிடுதல் ஆகியவற்றிற்குச் சிறந்த நிறுவனம்)
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.
T.P.: உள்ளூர் 021-2222165
வெளியூர் 0094 21-2222165
உரிமையாளர்: து.செல்வரத்தினம் (கற்கண்டு)

**சோதி படப்பிடிப்பாளர்**
(அன்றும் இன்றும் என்றும்
சிறந்த தரமான படப்பிடிப்பின் சிகரம்)
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**PMR முத்துமாரி அம்மன்**
யாழ். - கொழும்பு ரான்ஸ்போட்
சூராவத்தை, சுன்னாகம்.
T.P.:0777 157492

**கண்ணன் பான்சி**
அன்பளிப்புப் பொருள்கள், பரிசில் பொருள்கள், அலங்கார அழகுசாதனப் பொருள்கள் ஆகிய எல்லாப் பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்:
36, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
உரிமையாளர்: சுரேந்திரன்

யாழ்ப்பாண

உதயன்

## ஈழத் தமிழர்களின் ஐக்கிய பலம்

பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில் நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது.

இந்தப் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் எதிர்காலமும் போக்கும் எப்படியிருக்கப் போகின்றன என்பதற்குக் கட்டியம் கூறுவது போல இன்றைய அமர்வு அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று நடைபெறும் மிக முக்கிய நாடாளுமன்றக் கூட்டத்தில் இடம்பெறப்போகும் புதிய சபாநாயகர் தெரிவு போன்ற நிகழ்வுகளின் வெளிப்பாட்டை வைத்துக்கொண்டு இந்த நாடாளுமன்றத்தின் போக்கை ஓரளவு ஊகித்துத் தீர்மானித்துவிடலாம் என நோக்காளர்கள் கருதுகின்றார்கள்.

ஆட்சிக் கதிரைக்குப் பெரும்பான்மை இனத்தவர்களின் கட்சிகள் முட்டிமோதுவது ஒருபுறமும், ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் - ஐக்கிய - ஒற்றுமைப்பட்ட - மூன்றாவது சக்தியாக நுழைவது மறுபுறமுமாக விசித்திரமான ஒரு நிலையை இந்த நாடாளுமன்றம் இன்றைய முதல் அமர்வின்போது சந்திக்கப் போகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு சேர்ந்து தாங்கள் இயங்கப் போகிறார்கள் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மற்றும் ஐ.தே.கட்சிப் பட்டியலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஒருவரும் அறிவித்துள்ள நிலையில் தமிழ்க் கூட்டமைப்பின் ஐக்கியமும் வலுவும் மேலும் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நடந்த சந்திப்பும் ஒன்றுகூடலும் இந்த வலிமையை மேலும் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

"தமிழர்கள் ஆயுத ரீதியாகவும் - இராணுவ ஆதிக்கத்திலும் - வலிமையாகவும் பலமாகவும் இருப்பதோடு, அரசியல் ரீதியாகவும் பலமாக இருக்கின்றார்கள் என்ற உண்மை - உணர்வு - இந்தச் சந்திப்பில் முதன்மையாக இருந்தது. சர்வதேச சமூகத்துக்கு இந்த விடயம் தேர்தல் வெற்றி மூலம் உணர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தலைவர் வெளிப்படுத்தினார்" - என்று இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்தார்.

இனியும் தென்னிலங்கைச் சமூகம் ஈழத் தமிழர்களுக்கு அவர்களது நியாயமான அபிலாசைகளை நிறைவுசெய்யும் தீர்வை வழங்காமல், தப்பிக்க முடியாது என்ற உறுதிப்பாடு இச்சந்திப்பில் சகலருக்கும் ஏற்பட்டது என்றும் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல, இந்தச் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பின் 22 எம்.பிக்களும் எடுத்துக்கொண்டுள்ள உறுதியுரை தமிழ் மக்களைப் பொறுத்தவரை புதியதொரு திருப்பம் என்றே கூறலாம்.

"தமிழ்க் கூட்டமைப்பு என்றும் விடுதலைப் புலிகளுடன் ஒன்றாக இருக்கும் என்பதை இந்தச் சந்திப்பில் உறுதிபடத் தெரிவித்தோம். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு கிடைக்கும் வழிமுறையாக இருந்தாலும் சரி, இல்லை ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் எமது பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்றாலும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்தே நிற்கும் என்று உறுதிமொழி வழங்கியுள்ளோம்" - என்றும் கூட்டமைப்பு எம்.பிக்களின் சார்பில் தகவல் வெளியிட்ட அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இராணுவ வலிமையுடன் விளங்கும் விடுதலைப் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஒரே அணியில் செயற்படும் உறுதியுடன் நாடாளுமன்றத்திலும் தமிழர் பிரதிநிதித்துவம் ஐக்கியமாக நிற்பது ஈழ விடுதலைப் போராட்டத்தில் புதியதோர் திருப்புமுனை.

சுருக்கமாகச் சொல்வதானால் கடந்த ஐந்து தசாப்த காலமாக நியாயமான உரிமைகளுக்காகப் போராடி வரும் ஈழத்தமிழினம் முன்னெப்போதும் இல்லாத இராணுவ, அரசியல் பலத்துடன் தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவத்தின் கீழ் இன்று வீறுகொண்டெழுந்து நிற்கின்றது.

இப்போது ஸ்திரமான அரசும் இல்லாமல், அரசியல் இழுபறிகளால் பிளவுபட்டுக் குழம்பியிருக்கும் தென்னிலங்கை, இவ்வளவு உறுதியாக நிற்கும் ஈழத் தமிழர் தரப்போடு சமரசம் செய்ய - சமாதானப் பேச்சு மூலம், அமைதி முயற்சிகள் வாயிலாக, இணக்கத் தீர்வுகாண இணங்குமா?

தற்போது ஈழத்தமிழ் மக்களின் மனதை வியாபித்துள்ள கேள்வி இதுதான்.

சமாதான முயற்சி தொடர்பாகப் புதிய அரசு காட்டும் மெத்தனப்போக்கு இந்தக் கேள்வி நியாயமானதே என்பதை உறுதிப்படுத்துகின்றது.

# அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்றுவதற்குச் சட்ட நடவடிக்கை

தெல்லிப்பழை,ஏப்.22

வலி. வடக்குப் பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட - உயர்பாதுகாப்பு வலயம் தவிர்ந்த - ஏனைய பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், மதில்கள் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.செல்வரத்தினம் தெரிவித்தார்.

வலி. வடக்குப் பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட நிர்வாகப் பிரிவில் பொதுமக்களாலும் அரச மற்றும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றாலும் பிரதேச சபையிடம் அனுமதி பெறாது பல்வேறு கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், மலசல கூடங்கள், மதில்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன என்றும் -

அனுமதி பெறாது அமைக்கப்பட்ட இக்கட்டுமானங்கள் தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் புதிதாக அனுமதி பெறாது கட்டுமானப் பணிகளை மேற்கொண்டோர் பிரதேச சபையை அணுகி உரிய முறையில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் - பிரதேச சபைச் செயலாளர் எஸ்.செல்வரத்தினம் தெரிவித்தார்.

அனுமதி பெறாது வர்த்தக நிலையங்கள் அமைக்கப்படுவது பெருந்தெருக்கள் அமைப்பிற்கும் வீதிகள், பொதுக் கட்டடங்கள் அமைப்பிற்கும் இடையூறாக அமையலாம். அதேபோல் மலசலகூடங்கள், சுகாதார சேவைகள் பிரிவின் பரிசீலனையின் பின்னர் அனுமதி பெற்றே அமைக்கப்படவேண்டும்.

இவ்வாறே வீடுகள், மதில்கள் அமைப்பதிலும் சட்டச் சிக்கல்கள் உள்ளன. எனவே, பொதுமக்கள், நிறுவனங்கள் என்பன உரிய சட்ட அணுகுமுறைகளின் பின் கட்டடப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மாநகரசபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் தொடர்பில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தவகையில், சட்டவிரோதமாக அனுமதியின்றி கட்டடம் அமைத்த 15 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது என்றும் -

இதில் கச்சேரி - நல்லூர் வீதி விஸ்தரிப்புப் பகுதிகளில் கடைகள் அமைத்தவர்களின் கடைகள் சட்டமுறைப்படி இடிக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

குருநகர், பாஷையூர் பகுதிகளில் கழிவுநீர் வாய்க்காலுக்குக் குறுக்கே கட்டப்பட்ட 78 கட்டடங்கள், அக்கட்டட உரிமையாளர்களின் சம்மதத்துடன் இடிக்கப்பட்டன.

மாநகரசபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாகக் கட்டடங்களை அமைப்போர் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பொது அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய ஒத்துழைப்பையும் மாநகர சபை பெறவுள்ளது - என்றார் அவர்.

(ஒ-150-ரி)

# யாழ். சிறையில் பெரும் இடநெருக்கடி; இதனால் தொற்றுநோய் பரவும் அபாயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். சிறைச்சாலையில் பாரிய இடநெருக்கடி நிலவுவதாகவும் - இதனால் அங்கு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் - யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். சிறைச்சாலைக் கட்டடப் பகுதியில் அறுபது சிறைக் கைதிகளை மட்டுமே தடுத்துவைக்கக்கூடிய வசதி உள்ளது. ஆனால், தற்போது அங்கு 302 கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இரவில் உறங்குவதற்கான இட வசதி கூட இல்லாதநிலையே தற்போது காணப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் உறங்கும்போது ஏற்படும் நெருக்கடிகள் சில சமயங்களில் கைதிகளிடையே மோதல் உருவாகவும் காரணமாக அமைந்துவிடுகின்றன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது கைதிகள் சிலருக்கு அம்மை நோய் ஏற்பட்டுள்ளது: இடநெருக்கடி காரணமாக ஏனைய கைதிகளுக்கும் இந்த நோய் தொற்றக்கூடிய அபாயம் உள்ளது.

ஆகவே, இடநெருக்கடியைத் தீர்ப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள தெரிவித்தன

(ஒ-7)

# புதிய சபாநாயகர் யார்? இன்று நடக்கும் முதல் பலப்பரீட்சை

கொழும்பு,ஏப்.22

13ஆவது நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது. இன்று காலை சபாநாயகர் தெரிவின் பின்னர் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்துள்ள 225 பேரும் சத்தியப்பிரமாணஞ்செய்து பதவியேற்றுக் கொள்வார்கள்.

சபாநாயகர் பதவிக்கு முன்னாள் நீதி அமைச்சர் டபிள்யூ. கே.எம்.லொக்கு பண்டார ஐக்கிய தேசிய முன்னணி சார்பிலும் டி.ஈ.டபிள்யூ.குணசேகர ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிகள் சார்பிலும் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்க்கட்சியினரின் ஆதரவில் லொக்குபண்டார வெற்றிபெறுவார் என்று நம்பப்படுகிறது. அரச தரப்பு உறுப்பினர்கள் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சபைக்குள் வருவார்கள். அதேசமயம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவருக்குரிய ஆசனத்தில் அமர்வார்.

முன்னைய நாடாளுமன்றில் ஒரேயொரு மஞ்சல் ஆடை தரித்த பௌத்த பிக்கு உறுப்பினராக அமர்ந்திருந்தார். இந்த முறை 9 மஞ்சள் உடை பிக்குகள் அமர்ந்திருப்பார்கள். அதே வேளை, 12 பெண் உறுப்பினர்களும் சபையில் இருப்பார்கள்.

புதிய நாடாளுமன்றில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 22 உறுப்பினர்கள் இருப்பார்கள். என்றாலும் மேல் மாகாண மக்கள் முன்னணியும் மலையக மக்கள் முன்னணியும் தமிழ்க் கூட்டமைப்புடன் சேர்ந்து இயங்கவிருப்பதால் தமிழரசுக்கட்சி சார்பில் 24 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று கருதப்படுகிறது. மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தனித்துப் போட்டியிட்டு ஓர் ஆசனத்தைப் பெற்றுள்ளார். மேல் மாகாண மக்கள் முன்னணியின் சார்பில் மனோகணேசன் வெற்றி பெற்றுள்ளார். (ப)

## 'செல்வா விருது' வழங்கும் வைபவம் ஏப். 26ஆம் திகதி யாழ். பல்கலையில்!

யாழ்ப்பாணம்,ஏப் 22

தந்தை செல்வாவுடன் இணைந்து தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் செயற்பட்ட 13 பேருக்கு அவரின் சிரார்த்த தினமான எதிர்வரும் 26ஆம் திகதி 'தந்தை செல்வா விருது' வழங்கப்படவுள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் ஏற்பாட்டில் 26ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கில் இவ்விருது வழங்கும் வைபவமும் தந்தை செல்வா நினைவுப் பேருரையும் நூல் அறிமுகமும் இடம்பெறும்.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்திச் செயற்பட்டதற்காக ஜனாப் எஸ்.எல்.ஏ.அப்துல் லத்தீப், பூ.மா.செல்லத்துரை, க.ஆனந்தக்குமாரசுவாமி, இரா.தென்னரசு, வெ.கணபதிப்பிள்ளை, மன்சூர் மௌலானா, வித்துவான் கந்தையா, பண்டிதர் நாகலிங்கம், ந.அருணாசலம், மா.க.ஈழவேந்தன், சி.அரசரட்ணம், பண்டிதர் சச்சிதானந்தம், க.விநாசித்தம்பி ஆகியோர் தந்தை செல்வா விருதைப் பெறுகின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் தந்தை செல்வா நினைவுப் பேருரையில் 'தமிழ்த் தேசியமும் தேர்தல்களும் ஒருபார்வை' என்னும் தலைப்பில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கருத்துரையாற்றுவார்.

தந்தை செல்வாவின் அபிமானியான கவிஞர் தில்லைச் சிவன் எழுதிய 'தந்தை செல்வா காவியம்' என்னும் நூல் அறிமுகமும் இடம்பெறும். தென்னிந்தியச் திருச்சபையின் பேராயர் எஸ்.ஜெபநேசன் அறிமுக உரையினை நிகழ்த்துவார்.

முன்னதாக அன்று காலை 9.30 மணிக்கு யாழ். முற்றவெளியில் உள்ள தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு அறங்காவல் குழுவினரும் அபிமானிகளும் மலரஞ்சலி செலுத்துவார்கள்.(ஒ-8)

**நாளை**

சித்திரை 11
வெள்ளிக்கிழமை
(23.04.2004)
திதி : சதுர்த்தி
பின்னிரவு 2.00 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பகல் 4.25 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 6.00 - 7.30
ராகுகாலம்: 10.30 - 12.00
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உரையாடல் என்பது அறிவுபூர்வமான பரிவர்த்தனை. தர்க்கம் செய்வது அறியாமையின் பரிவர்த்தனை.

# வரட்சி நீடிப்பதால் நாட்டில் சிறுபோகம் தாமதமாகலாம்

கொழும்பு,ஏப்.22

சிறுபோகச் செய்கைக்கான மழை வீழ்ச்சி இன்னும் உரியளவில் பெற்றுக்கொள்ளப்படவில்லை என விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் மழை பெய்யாதுவிட்டால் சிறுபோகச் செய்கையைப் பின்தள்ளியே ஆரம்பிக்கவேண்டும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறுபோகச் செய்கை மூலம் நாடுமுழுவதும் வழமையாக 4 கோடி 5 லட்சம் புசல் நெல் விளைச்சல் பெற்றுக்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியான வரட்சி காணப்படுமாயின் பொருத்தமான பயிர்ச்செய்கையை விவசாயிகள் மேற்கொள்ளவேண்டும் - என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ-ரி)

# கோப்பாய் துயிலுமில்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

நாகர்கோயில் பகுதியில் இரண்டாயிரமாம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் நினைவுக்கல் திரைநீக்கம் நேற்றுமுன்தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றது.

வீரவேங்கை விழிக்கதிர் எனப்படும் இரத்தினசிங்கம் மலர்விழி (பிரான்பற்று, பண்டத்தரிப்பு) என்பவரது நினைவுக் கல் திரைநீக்கமே இடம்பெற்றது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல மண்டபத்தில் அவரது திருவுருவப் படம் வைக்கப்பட்டு மாலை 4.30 மணிக்கு நினைவுக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஈகச்சுடரை வீரவேங்கை விழிக்கதிரின் தந்தை இரத்தினசிங்கம் ஏற்றிவைக்க அவரது சகோதரன் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்தார். நினைவுரையை யாழ் மாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் யாழவன் நிகழ்த்தினார்.

மாலை 5.30 மணிக்கு நினைவுக் கல் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. (ஒ-10-72)

# பூநகரியில் 2 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில்

கிளிநொச்சி,ஏப்.22

கிளிநொச்சி கல்விவலயத்தில் 13ஆண்டுகளாக இருபாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

பூநகரிக் கல்விக்கோட்டத்தில் உள்ள மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலை, அத்தாய் முத்துக்குமாரசாமி வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுமே மூடப்பட்டுள்ளன.

1991ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மண்டைதீவில் இருந்து மேற்கொண்ட 'வலம்புரி'படை நடவடிகையின்போது பூநகரிப்பிரதேசம் இராணுவப் பிடியில் சிக்கியது. இதன் போது பூநகரி கல்விக் கோட்டத்தில் உள்ள 29பாடசாலைகளில் 15வரையான பாடசாலைகள் இராணுவப் பிடியில் சிக்கி அழிந்தன.

இந்நிலையில் ஏனைய பாடசாலைகள் இராணுவம் 1996ஆம் ஆண்டு பூநகரிப்பிரதேசத்தைவிட்டு வெளியேறிய நிலையில் மக்கள் மீளக் குடியமர்ந்து மீண்டும் பாடசாலைகள் இயங்கத்தொடங்கியுள்ளன.

இருந்தும் இரு பாடசாலைகளும் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(ஐ-12)

## நூல் வெளியீடு

வலிகாமம்தெற்கு,ஏப்.22

சிவநெறிச் செம்மல் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் எழுதிய "வாழ்வியல் கிரியைகள்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற உளளது.

சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கலாநிதி கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் விழா இடம்பெறும்.

இந்துமதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள், கீரிமலை ஆதீனம் சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், அரியாலை சிவஸ்ரீ இ.சுப்பிரமணியக்குருக்கள், இணுவில் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், சுன்னாகம் சிவஸ்ரீ கலாநிதி நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

நல்லை ஆதீன முதல்வர் அருளாசி வழங்குவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் நூலை வெளியிட்டு உரையாற்றுவார். (ஓ-28-152)

## கிளிநொச்சியில் ஆசிரியருக்கு பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி,ஏப்.22

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் ஆரம்ப, கனிஷ்ட வகுப்புகளில கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான துரித மீட்டல், கற்பித்தல் முறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையின் வள நிலையத்தில் இடம்பெற்று வருகிறது.

கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகிய இப்பட்டறை எதிர்வரும் 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. 'யுனிசெவ்' நிறுவன உதவியுடன் இப்பட்டறை இடம்பெறுகின்றது.(ஐ-12)

## கொடிகாமத்தில் நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி,ஏப்.22

கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பின்வரும் இடங்களில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு மிருசுவில் வடக்கு அ.த.க. பாடசாலையிலும், பகல் 11.00 மணிக்கு உசன் கந்தசாமி கோவிலுக்கு அருகிலும், பகல் 12.00 மணிக்கு கொடிகாமம் பிரதேச சபை அருகிலும் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-117)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்த அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி-34194)

FASHION BEAUTY CORNER
(Centre For Modern Women)



- முக ஒப்பனை (Make Up), மணப்பெண் அலங்காரம், கூந்தல் அலங்காரம்.

கேக் ஐசிங், திருமண வைபவ கேக் ஐசிங் & ஐசிங் மலர்கள் தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. சேரவிரும்புபவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்.

மே மாதம் முதலாம் (01.05.2004) திகதி ஆரம்பமாகவுள்ளன.
மேலதிக விவரங்களுக்கு எமது நிலையத்துடன் தொடர்புகொள்க.

- **Facial, Birthday Cake, Structures Waxing Threading, Hairdye, Hennatreatment, Perming, Straighing, Rich Cake, Normal Cake, Bleaching, Hair Cutting,** பொடுகு சிகிச்சை **(Dandurfftreatment)** முடி உதிர்வதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் யாவும் செய்துவிடப்படும்.

திருமதி ஜெயவாணி கஜேந்திரன்
(Beautician)
14, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 6864 INVOICE

(31100) (34-21-19-16)

Alpha Steel Collection

GUARANTEED BY Alpha ALPHA INDUSTRIES LIMITED ISO 9002 CERTIFIED

அல்பா நிறுவனத்தின் ISO 9002 தரச் சான்றிதழ் பெற்ற உற்பத்திப் பொருள்களின் ஏகவிநியோகஸ்தர்களாகிய நாம் கீழ்க் காணும் பொருள்களை (சகலவிதமான இரும்புப் பெட்டிகள், உருக்கு அலுமாரிகள், கோவை அலுமாரிகள், உருக்கு மேசைகள், கணனி மேசைகள், ரி.வி.ஸ்ரான்ட் போன்ற இன்னும் பல) ஒரு வருட உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.




இத்தனைக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

திருச்செந்தூரன் வர்த்தக நிலையம்

315. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 4590348 RES 4590338

(31099)

# VACANCY

## CARE International - Srilanka

The vacancy has arisen for the post of PROJECT ASST - AGRICULTURE TRAINING (LIFT) - JAFFNA

**JOB SUMMARY:-**

The Project Assistant Agriculture Training (PATA) will be responsible for direct implementation and monitoring of the agriculture activities (Farmer Field Schools for rice and other field crops, bio-intensive gardening (BIG) undertaken with participant groups (CBOs). S/he will be responsible for conducting all training and education activities with the groups (including needs assessments). Additionally, S/he will ensure that the agriculture component is closely integrated with all of the other project components and will work closely with other technical assistants to ensure this. The incumbent is responsible for ensuring that local implementing partners are strengthened so that they can proceed with the implementation calendar as planned. S/he is also responsible for collecting the data required through from the M&E system. The accuracy & quality of the data is the responsibility of the PATA. The PATA is required to keep accurate field notes that will be used to help devolop and continually improve the project's programme in agriculture. S/he will liaison with counterparts such as Department of Agrarian Services, Divisional Secretary and farmer organizations.

**Working Conditions:**

85% of the time is spent implementing the project activities in the field. 15% of the time will be in the office, preparing reports and updating database.

**Required Qualifications and Competencies:**

* Bachelor's degree in Agriculture, Natural Resources Management, Agriculture Engineering, or other relevant subject and one year experience in a relevant post, OR Diploma / Certificate in accountancy and three years relevant experience.
* Excellent interpersonal, communication, training and team building and team working skills.
* The ability to communicate (verbal and written) in Tamil and English.
* Proficient in the use of basic computer programmes (microsoft office)
* Highly developed problem solving and conceptual skills and the ability to innovate,
* The ability to work in remote areas with extensive travels by motor cycle over poor roads.

Those who are intersted & possess the required qualifications, experience and skills may please send the application to reach Human Resources Division on or before the 01-05-2004.

***CARE International - Sri Lanka***
***Human Resource Division,***
***7A Gregoy's Road, Colombo 7.***

(C/34558)(21-16-19)

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

தோற்றம் 11 - 01 - 1940



மறைவு 23 - 01 - 2004

அமரர் **முருகன் கந்தசாமி** (மெக்கானிக்)

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டிகரணக் கிரியைகள் இன்று (22.04.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

\- குடும்பத்தினர்.

*அண்ணா சிலையடி,*
*கரணவாய், கரவெட்டி.*

(31083) (21-19-16)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

அந்திரான், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னத் தம்பி 18.04.2004 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தெய்வானையின் அன்பு மகனும் மகிழம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லர் பொன்னம்மாவின் அன்புச் சகோதரரும் நாகராசா, ஸ்ரீநாயகம், சாந்தலிங்கம் (பிரான்ஸ்), சாந்தா (பிரான்ஸ்), விஜயகுமாரி, சந்திரகுமார்(பிரான்ஸ்), சாந்தகுமார் (பிரான்ஸ்), சாந்தகுமாரி, பாஸ்கரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சந்திரா, நாகேஸ்வரி, ஜெசிந்த (பிரான்ஸ்), லலீனாதேவி (பிரான்ஸ்), றாகினி(பிரான்ஸ்), ராஜேஸ்வரி (பிரான்ஸ்), தவரஜனி(பிரான்ஸ்), வைகுந்தநாதன்(பிரான்ஸ்), குணரட்ணம், இரகுநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினிதா (டென்மார்க்), ஜெசிதா, சுபசீலன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயசீலன், சுபலீலா, குணசீலா, குணசீலன், சத்தியசீலா, பரமசீலன், விசித்திரா, ஜேறாம், டிவாரகா, தாட்சாயினி, டினேகா, ராம்கேசல், ராம்வில்சன், அபிசாயினி, கிருசாணி, கீதா (பிரான்ஸ்), விஜிந்தன் (பிரான்ஸ்), விஜிந்திரா (பிரான்ஸ்), ஜெஸ்மின்தர்சிகா(பிரான்ஸ்), யேம்ஸ்கயறூபன் (பிரான்ஸ்), ஆன்பாபறா (பிரான்ஸ்), மிதூண் (பிரான்ஸ்), சாருகன் (பிரான்ஸ்), மகிழினா (பிரான்ஸ்), மதுசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் அபிசனா (டென்மார்க்), அஸ்மிதா (டென்மார்க்), நிதூன்ராஜ், சுபிக்சனா, கிஷாந் ஆகியோரின் பாசமிகு பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2004) வியாழக்கிழமை பி.ப.1.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்றோட்,*
*அந்திரான்.*

(31118)(21-19-16)

தகவல்:
**மகிழம்மா** (மனைவி).
**பிள்ளைகள்.**

# பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்குப் புலிகள் தயார் நோர்வே ஊடாக அரசு தொடர்பு கொள்ளவில்லை

## கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்திக்கையில் பிரபாவே தெரிவிப்பு

கிளிநொச்சி,ஏப்.22

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர் என்று தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார். ஆனால், புதிய அரசு நோர்வே ஊடாகத் தம்முடன் இன்னும் தொடர்பு கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர் கருத்துத் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இதனைத் தெரிவித்தார்.

எமது மக்களின் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண்பதாக இருந்தாலும் சரி, யுத்த மூலம் தீர்வுகாண்பதாக இருந்தாலும் சரி, விடுதலைப் புலிகளுடன் தமிழ்க் கூட்டமைப்பு இணைந்து ஒன்றாகவே செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தலைவர் பிரபாவுடனான சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றியைத் தலைவர் பிரபாகரனுடன் நாம் பகிர்ந்துகொண்டோம்.

ஆயுத ரீதியாகப் பலமாக இருக்கின்ற அதேவேளை, அரசியல் ரீதியாகவும் பலமாக இருக்கின்றோம் என்ற விடயம் தேர்தல் வெற்றி மூலம் உணர்த்தப்பட்டுள்ளது என்று தலைவர் தெரிவித்தார்.

இனியும் தென்னிலங்கைச் சமூகம் எம்மை ஏமாற்றமுடியாது. அந்தளவுக்கு மக்கள் தெளிவான ஆணையைத் தந்துள்ளார்கள்.

ஆகவே, எல்லோரும் சேர்ந்து ஓரணியாகச் சகல விடயத்திலும் செயற்படவேண்டும் என்ற கருத்து சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கருணாவின் விடயம் சரியான தீர்க்கதரிசனத்துடன் விடுதலைப் புலிகளின் தலைமையால் தீர்க்கப்பட்டுள்ளது என்று நாம் தெரிவித்தோம்.

தேர்தலின்போது இந்த விடயத்தால் எமது மக்களின் நிலை பின்தள்ளப்படும் என்று சகலரும் நினைத்தோம். அந்த நிலைமை மாறித் தேர்தல் வெற்றியுடன் இந்த வெற்றியையும் கொண்டாடும் நிலை ஏற்பட்டது.

ஒரு கொடி, ஒரு தலைவன் என்ற ரீதியில் மக்கள் செயற்படுகின்றனர். இதைத் தலைவர் நிரூபித்து இருக்கிறார். இதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றும், தமிழ்க் கூட்டமைப்பு எப்போதும் விடுதலைப் புலிகளுடன் ஒன்றாக இருக்கும் என்றும் தெரிவித்தோம். அது ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு கிடைக்கும் வழிமுறையாக இருந்தாலும் சரி, இல்லை ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் எமது பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்றாலும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடன் கரம் கோர்த்து நிற்கும் என்று உறுதிமொழி வழங்கினோம் - என்றார்.

(க-3)

# மணல் கடத்திய 14 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் அபராதம்

## யாழ். நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம்,ஏப்.22

உழவு இயந்திரம், லாண்ட்மாஸ்ரர் மற்றும் லொறி ஆகிய வாகனங்களில அனுமதிப்பத்திரம் இன்றி மணல் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் 14 பேருக்கு யாழ்.நீதிமன்றம் மொத்தம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

லாண்ட்மாஸ்டர்கள் மூலம் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்புத்துறை, பூங்கன்குளம் வீதியைச் சேர்ந்த யோகநாதன் சுபாஸ்கரன், அம்பிகைபாகன் ரஜீவ், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணேசன் சசிகரன், அரியாலை சாவற்காட்டுச்சந்தியைச் சேர்ந்த மயில்வாகனம் யோகேந்திரன், கொழும்புத்துறையைச் சேர்ந்த நடராசா தீசன், கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தசாமி யசோதரன், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த துரைராசா சந்திரகுமார், யாழ்ப்பாணம் வைரவர் கோவிலடியைச் சேர்ந்த இராசலிங்கம் அர்சுநாதன், கொழும்புத்துறை புங்கன் குளம் வீதியைச் சேர்ந்த பழனிச்சாமி சுதாகரன் ஆகிய 9 பேரையும் டிராக்டர்களில் மணல்கடத்தினார்கள் என்று அரியாலை, புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த சண்முகலிங்கம் காண்டீபன், திருநெல்வேலியைச் சேர்ந்த வேலுச்சாமி ரமேஷ், அரியாலையைச சேர்ந்த கனகன் சசிகரன், அரியாலை நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த சொக்கலிங்கம் விஜயகுமார் ஆகிய நான்கு பேரையும்,

லொறியில் மணல் கொண்டு சென்றார்கள் என்று கட்டைப்பிராயைச் சேர்ந்த செல்லத்துரை செல்வகுமார் என்பவரையும் யாழ். பொலீஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட 14 பேரையும் யாழ்நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்த போது குற்றவாளிகள் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

இதனை அடுத்து அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் மணலைப் பறிமுதல செய்து வாகனங்களை யாழ். பொலீஸ நிலைய பாதுகாப்பில் விடுமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், சம்பந்தப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் தமது பகுதி கிராம சேவகர் ஊடாகப் பிரதேச செயலர்களிடம் எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என்று சத்தியப்பிரமாணக் கடிதம் வழங்கவேண்டும் என்றும் -

அதன் அறிக்கை யாழ். நீதிமன்றத்திற்குக் கிடைக்கப்பெற்றதும் தடுத்துவைக்கப்படும் வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் -

எதிர்காலத்தில் தொடர்ந்தும் இதே வாகனங்கள் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாகப் பொலீஸாரிடம் அகப்படுமாக இருந்தால் கூடிய தொகை அபராதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, வாகனங்களும் பறிமுதல செய்யப்படும் எனவும நீதிவான் கடுமையாக எச்சரித்தார்.

இதேவேளை, பாடசாலைக் கட்டடத் தேவைக்கென பெறப்பட்ட மணலை விற்பனை செய்தமை தொடர்பாக விசாரிப்பதற்காக அரியாலைப் பகுதிப் பாடசாலை ஒன்றின் அதிபரையும், கட்டட ஒப்பந்தகாரரையும் எதிர் வரும் 27 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைத் தேவைக்கென கொள்வனவு செய்யப்பட்ட மணல் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதா என்பதனை அதிபர் மேற்பார்வை செய்தாரா என்பதனையும், தேவைக்கென கொள்வனவு செய்யப்பட்ட மணல் எவ்வாறு மதியாக இருந்தது. அது எவ்வாறு விற்பனை செய்யப்பட்டது என்பதனையும் அறிவதற்காகவே இவ்விருவரையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-5)

# விசர்நாய்க் கடித் தொல்லை குடாநாட்டில் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், ஏப்.22

யாழ். குடாநாட்டில் விசர்நாய்க் கடித்தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது யாழ். போதனா வைத்தியசாலைப் பதிவேடுகளின் படி அறியக்கூடியதாகவுள்ளது.

நேற்றுமுன்தினம் மட்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் உட்பட 15பேர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

புத்தூர் வடக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான வி.கிட்டின பிள்ளை (வயது 80), அவர் மனைவி கி.கெங்கம்மா (வயது 70), இவர்களின் பேரர்களான கே.குகநந்தினி (வயது 17), எஸ்.கௌசல்யா (வயது 18), ஆர்.சர்மிளா (வயது 18), உறவினரான ஆர்.செல்லத்துரை (வயது 54) ஆகியோரும் - யாழ்ப்பாணத்தில் எம்.ரமணன் (வயது 14), ஆர்.பாலசிறிதரன் (வயது 27) ஆகியோரும் - கோண்டாவிலில் என்.புலேந்திரன் (வயது 18) அளவெட்டியில் எம்.இராசரத்தினம் (வயது 83), சுன்னாகத்தில் கே.கந்தையா (வயது 70), கொக்குவிலில் வி.நல்லையா (வயது 79), ஊரெழுவில் ஆர்.ஜெவேஜன் (வயது 4) நாயன்மார்கட்டில் வி.யோகேஸ்வரி (வயது 32), கோப்பாயில் ஜே.ஜெயந்தினி (வயது 25) ஆகியோருமாக 15பேர் விசர்நாய்க்கடிக்கிலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

யாழ். ஆஸ்பத்திரிப் பதிவேடுகளின்படி கடந்த 20 நாள்களில் மாத்திரம் 112பேரும் இந்த வருடத்தில் நேற்றுவரை 856பேரும் விசர் நாய்க்கடிக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டில் தினமும் பரவலாக இடம்பெறும் இந்த விசர்நாய் கடியினால் மக்கள் பெரும்பாலானோர் சிகிச்சை பெறாத நிலையில் மரணத்தைச் சந்திக்கும் அபாய நிலையும் அதிகரித்து வருகிறது.

யாழ். வைத்தியசாலை வைத்தியர்களின் உத்தேசப்படி விசர்நாய்கள் அதிகரித்துக்கொண்டே வருவதாகவும் -

மேலும் வெப்பம் அதிகரித்த இக்காலவேளையில் நாய்களுக்கு இந்நோய் பெருகும் வாய்ப்பே அதிகம் எனவும் -

இதனைக் கட்டுப்படுத்த நகர சபையோ, பிரதேச சபைகளோ கட்டாக்காலி நாய்களை உடனடியாக அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விசர்நாய்க்கடிக்கு இலக்காகும் எத்தனையோ வேறு வளர்ப்பு மிருகங்களும் இந்நோய்க்குள்ளாகி இறக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

(ஓ-15)

## நலிவுற்றோர் நலன்பேண கொடிவாரம்

கிளிநொச்சி,ஏப்.22

கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலையம் நலிவுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் ஒன்றினை நடத்தி வருகிறது.

இதன் ஒரு கட்டமாகச் சமுதாய முன்னேற்ற நிலையம், நலிவுற்றோரின் நலன்களைப் பேண கடந்த 15ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை கொடிவாரம் ஒன்றினை அனுஷ்டித்தது.

இவ்வாரத்தில் நலிவுற்றோருக்கு உண்டியல் மூலம் நிதி திரட்டும் பணிகள் உட்பட கலைநிகழ்வுகளும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் இடம்பெற்றன.

(ஐ 12)

# கல்விச்சாலைக் காட்சிகள்



மாதகல் சென்.ஜோசவ் மகா வித்தியாலயத்தின் ஆராதனை மண்டபத் திறப்புவிழா நிகழ்வில் அதிபர் வி.சுப்பிரமணியம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மற்றும் விருந்தினர்களும் படத்தில் உள்ளனர். (படம்: மாதகல் செய்தியாளர்)



ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர் பி.வேணுகோபால் வாணிதாசன் மற்றும் அதிபர் அருட் சகோதரி திரேசா சில்வா, ஊர்காவற்றுறை பங்குத்தந்தை எ.ஞானப்பிரகாசம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

(படம்:ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக்கல்விப் பிரிவின் கலை விழாவில் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் உதயா சிவஞானம், யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.சுப்பிரமணியம், கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (10)



யாழ். மாநகர மேயராக இருந்த அமரர் எஸ்.எஸ்.நவரத்தினம் ஞாபகார்த்தமாகக் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சிறந்த மாணவி ஒருவருக்குப் பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர் செ.மகாதேவனால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி வீதியில் நொத்தாரிஸ் ஒழுங்கையில (ஞானம் கடையிலிருந்து கிட்டத்தட்ட ஐந்தாவது ஆதனம்) வெறுங்காணி 7 பரப்பு, வீடும் காணியும் 5 பரப்பு, நெல்வயல் 23 பரப்பு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவஞானம் ஞானசுந்தரன், C/o சி.எம். இராஜேந்திரா, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை. (31090)

நந்தாவில் அம்மன் கோயில் முன்பாக 3500 சதுர அடி கொண்ட வீடு 4½ பரப்புக்காணி, தனிமையான கிணறுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.செந்தில், நந்தாவில் அம்மன் கோயிலடி முன்பாக, கொகுவில். (31061)

மொபிட்டல் மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 071 2797025, 0602212775 (கபில்). (31110)

பாவித்த அலுமாரிகள், சோக் கேஸ், மேசை என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: P.G. இராஜேந்திரம், உரும்பிராய் சந்தி, உரும்பிராய். (31114)

### தவறிவிட்டது

இல.413, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் பாலசுந்தரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.441520956V) 16.04.2004 வெள்ளிகிழமை காலை 9.30 மணியளவில் திருநெல்வேலி A.G.A. Office இற்கும் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (சீ-34579)

### அடிக்கல் நடும் விழா

புததூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரியின் பவளவிழாவை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள முன்னாள் அதிபர் சு.குமாரசுவாமி நினைவு மண்டபத்துக்கான அடிக்கல்நடும் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பகல் 12மணிக்கு கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-72)

### உடன் விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி,
Cliber 115
மோட்டார் சைக்கிள்,
WFGA SONY 21" TV
உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777 - 570138. (C/34570)

**க.பொ.த.(உயர்தர) பரீட்சையின் பின்னர் இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு**

- பிருந்தாவன் கல்லூரி -
*(முன்னாள் நாஷனல் பெல்ட் கிறேற் கல்லூரி)*
**இந்தியா, பெங்களூர் சர்வகலாசாலையின் பட்டப்படிப்பு நெறிகள்**

B.B.M., B.Sc., B.C.A., B.Com+ Computer பட்டப்பின் படிப்பு நெறிகள் M.B.A., M.Sc., M.C.A. 2004 ஏப்ரல் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கருத்தரங்கு இடம்பெறும். அதேபிடத்தில் 25ஆம மற்றும் 26ஆம் திகதிகளில் காலை 11மணி முதல் மாலை 5மணி வரை அனுமதிகள் வழங்கப்படும்.

★ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 261 மாணவர்கள் மற்றும் 41 பிறநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்வி கற்கும் வாய்ப்பு.
★கடந்த 10ஆண்டுகள் கால இடைவெளியில் இக்கல்லூரியில் கற்ற ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 250மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளனர்.
★கருத்தரங்கில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பதிவுக்கட்டணமின்றிப் பதிவுமேற்கொள்ளவும், புலமைப்பரிசில் சலுகை, கட்டணக்கழிவு மற்றும் தவணைமுறைக் கட்டணச் சலுகை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளவும் இயலும்.
★2004ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும், பரீட்சை முடிவுகளை எதிர்பார்க்கும் நிலையில் அனுமதிக்கான ஒதுக்கீடு கோர இயலும்.
★அனுமதி ஒதுக்கீட்டுக் கட்டணம் 400அமெரிக்க டொலர்கள்.
★மேலதிக விவரங்களை இணையத் தளத்தில் பெறமுடியும்.
★இணையத்தளமுகவரி
www.nfgcollege.com
★மின்அஞ்சல் மூலமும் விண்ணப்பிக்கலாம்.
★மின்அஞ்சல்முகவரி
nfgc@bgl.vsnl.net.in

*இன்று (22.04.2004) மாலை 10.30 மணிக்கு "ஐ" அலைவரிசையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியினைத் தவறவிடாதீர்கள்.*

**கொம்பனி செக்கிரற்றேறியல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட**
Company Secretarial Services (Pvt) Ltd
இலக்கம்: 285C-1/1,
ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை,
நுகேகொட.
*தொலைபேசி இலக்கம்:*
(C-34529) *011-2854438.*

# நிலவாடகை செலுத்தாதோர் மீது யாழ். மாநகராட்சி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். முனீஸ்வரன் வதியில் உள்ள அங்காடி கடை வியாபாரிகளில் நில வாடகை செலுத்தாதவர்கள் மீது யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கடந்த இரு மாதங்களாக நில வாடகையினைச் சில வியாபாரிகள் செலுத்தவில்லை என்றும் - இதுபற்றிக் கலந்துரையாடுவதற்கு அங்காடி வியாபாரிகள் சங்கத் தலைவருக்கு மாநகரசபை ஆணையாளர் கடிதம் ஒன்றை அனுப்பியும் இதுவரை சங்கத் தலைவர் இதற்கான நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் கூறப்பட்டது.

ஆகையால், இதுபற்றி சட்டநடவடிக்கைகள் வெகுவிரைவில் எடுக்கப்படவுள்ளதாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## 31ஆம்நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 26 - 09 - 1970



இறப்பு 23 - 03 - 2004

### செல்வன் குணசிங்கம் ரங்கேந்திரன்

*அன்புக்கும் பண்புக்கும் ஆதரவாய் இருந்தீர்!*
*விருட்சமாய் விழுது விட்டு வேருடனே திகழ்ந்தீர்!*
*உடம்பு மறைந்தாலும் உங்கள் நினைவு மனதை விட்டு அகலாது.*

இன்று (22.04.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ராஜ வீதி,*
*கல்வியங்காடு.*
(31137)(34-13-17)

பிரிவால் வருந்தும்:
- அன்புத்தாய் கிளி.

## அறிவித்தல்

12.04.2004 ஆம் திகதிய 'உதயன்' நாளேட்டின் 04 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள 'காணி விற்பனைக்கு' என்கின்ற விளம்பரம் தொடர்பாக அனைவருக்கும் அறியத் தருவதாவது.-

சம்பந்தப்பட்ட வட்டுக்கோட்டை, மூளாய் வீதியில், 11 ஆம் வட்டாரத்தில் 84 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 'கயட்டியவத்தை' என்னும் 18¼ பரப்பு விஸ்தீரணம் உள்ள ஆதனம் தற்போது மலேஷியாவில் வசிக்கும் அரியரத்தினம் பெண் அருந்தவதேவிக்கு உரியதென்றும், இவ்வாதனத்தை அறுதிவிற்க குறித்த விளம்பரத்தில் குறிப்பிட்டது போல பரராஜசிங்கம் என்பவருக்கோ அல்லது தி.நல்லையா என்பவருக்கோ அதிகாரம் எதுவும் இல்லை என்பதனை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**செல்லத்துரை மகாலிங்கம்,**
(அ.அருந்தவதேவியின் தத்துவக்காரர்)
*புதிய டிஸ்பென்சரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை*
(31058)(34-16-13)

வடக்கு - கிழக்கில் நிலவும்

# கல்விப் பாதிப்புகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் முறையிட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.22

வடக்கு - கிழக்கில் கல்விச்செயற்பாடுகளில் நிலவும் பாதிப்புக்கள் குறித்து ஜனாதிபதியிடம் நேரடியாகத் தெரிவிக்க வடக்கு - கிழக்கில் இருந்து 15 மாணவப் பிரதிநிதிகள் இந்தமாத இறுதியில் கொழும்பு செல்லவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இதற்கான ஏற்பாடுகளை 'பூச்சியம்' நிறுவனம் மேற்கொண்டுவருகின்றது.

கல்விச்செயற்பாடுகளில் ஏற்பட்ட பாதிப்புகளை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டும் வகையில் சில பிரச்சினைகளைக் குறிப்பிட்டு ஒரு லட்சம் மாணவர்களிடம் கையொப்பம்பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் ஆரம்பமாகக் கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் கையொப்பம் திரட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு - கிழக்கில் மாணவர்கள் கல்வியின் பாதிப்புகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கடந்த கால யுத்தத்தினால் மாணவர்களுக்கு ஏற்பட்ட உடல் மற்றும் உளம்சார்ந்த பாதிப்புக்களுக்கான நடவடிக்கைகள், கல்வி அபிவிருத்தி என்பன குறித்த சில விடயங்களைக் குறிப்பிட்டே கையெழுத்துத் திரட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கல்வியில் அங்கத்துவம் வகித்து வரும் நிறுவனங்கள் பல ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (ஒ-6)

## செய்தியாளர்கள் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள கீழே குறிப்பிடப்படும் இடங்களில் உதயன் நாளிதழின் பிரதேசச் செய்தியாளர்களாகப் பணியாற்றுவதற்கு ஆர்வமும், தகுதியும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழில் நிறைந்த தேர்ச்சியும் செய்தித்துறை மற்றும் பத்திரிகைத்துறைகளில் நாட்டமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

25 முதல் 30 வயதுடையோர் விரும்பப்படுவர்.

விண்ணப்ப இறுதி நாள்: 30.04 2004

- கிளிநொச்சி நகரம்
- பரந்தன்
- வட்டக்கச்சி
- இராமநாதபுரம்
- கண்டாவளை
- பூநகரி
- முழங்காவில்
- வேரவில்
- திருவையாறு
- ஸ்கந்தபுரம்
- முல்லைத்தீவு நகரம்
- முள்ளியவளை
- ஒட்டுசுட்டான்
- முத்தையன்கட்டு
- தண்ணீரூற்று
- புதுக்குடியிருப்பு
- மாத்தளன்
- உடையார்கட்டு
- கற்சிலைமடு
- மல்லாவி

பிரதம ஆசிரியர்
உதயன் பப்ளிகேஷன்ஸ்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சீ-34550)(34-13-17)

## மரண அறிவித்தல்

### திருமதி அருளப்பு கிளாறம்மா



யாழ்ப்பாணம், ஸ்ரேசன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அருளப்பு கிளாறம்மா 15.04.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்புவின் அன்பு மனைவியும் ராணி, காலஞ்சென்ற திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிமியோனின் அன்பு மைத்துனியும் பெனடிக்ற் (பிரான்ஸ்), டொமினி, மெற்றில்டா, மேரி யோசேப்பின், டொனாஸ் (பிரான்ஸ்) , டொனால்ட் ஆகியோரின் பாசமிகு தாயாரும் லூர்துமலர், புஸ்பராணி, என்சிலி மகாராஜா, லூர்துநாயகம், மேரி இராஜவதனா ஆகியோரின் அன்பு மாமியும் விஜி, சுஜி, யொண்சிகா, ஜான்சன், ஜான்சி, கௌசிகன், கௌசீலன், கௌறீசன், ஜெனா, சாளினி, நிறோஜி, ரொய்சியா, ஜீவிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*64/1 B, ஸ்ரேசன் ஒழுங்கை ,*
*யாழ்ப்பாணம்.*
(31129)(26-34-13-17)

தகவல:
அ.டெமினி (இந்திரன்) - *மகன்*




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட







LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

## கல்லூரி நூலகம் திறப்பு விழா

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நவீன நூலகம், தகவல் தொழில்நுட்ப மையம ஆகியன நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவனும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய வே.தி.செல்வரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூல்நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (ஐ-70)

## பம்பாய் வெங்காயச் செய்கை வீழ்ச்சி

வட்டுக்கோட்டை,ஏப்.22

அராலிப்பகுதியில் இம்முறை பம்பாய் வெங்காயச் செய்கை என்றுமிலலாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளது.

குடாநாட்டில் அதிகளவில் பம்பாய வெங்காயச் செய்கையில் ஈடுபடும் அராலிப்பகுதி விவசாயிகள் காலநிலையின் சீரற்ற தன்மையினால் பம்பாய் வெங்காய உற்பத்தியில் இம்முறை அதிக நாட்டம் காட்டவில்லை.

இத்தகைய சீரற்ற காலநிலையினால் இம்முறை பம்பாய் வெங்காய செய்கை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும், இதனால் தமது பெரும் வருமானம் குறைவடைந்துள்ளது எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-161)

# சமாதானச்சூழல் நிலவுகின்ற தற்போதைய நிலையிலும் கிளிநொச்சிப் பாடசாலைகளில் அபிவிருத்தி ஏதுமில்லை

## கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அரியரட்ணம் உதயனுக்குத் தெரிவிப்பு



ட.அரியரட்ணம்

கிளிநொச்சி,ஏப்.22

போர்நிறுத்த ஒப்பந்தம் ஊடான சமாதான சூழலிலும் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் எந்தவித அபிவிருத்திப் புனரமைப்பு பணிகளும் இடம்பெறவில்லை.

- இவ்வாறு கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரட்ணம் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் வைத்து 'உதயன்' செய்தியாளருக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

போர் இடம்பெற்ற காலங்களில் எமது வலயப் பாடசாலைகள் பௌதிக வள ரீதியாக பெரும் அழிவுகளை எதிர்கொண்டன. அப்பாடசாலைகள் இன்று வரை அவ்வாறான நிலையிலேயே உள்ளன.

முப்பது ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட எமது கல்வி வலயத்தில் 63 பாடசாலைகள் போரின்போது அழிந்துள்ளன. இப்பாடசாலைகளில் இதுவரை புனரமைப்புப் பணிகள எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. போர் நடைபெற்ற காலங்களில் நிதியுதவிகள் கிடைக்கவில்லை. சமாதானசூழல் நிலவும் காலத்திலும் நிதியுதவிகள் கிடைக்காமை பெரும் குறைபாடு என்றே நான் கருதுவேன்.

எங்கள் கல்வி வலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்புகளைக் கொண்ட இருபது பாடசாலைகள் உள்ளன. 20 பாடசாலைகளுக்கும் கணனிகள் அவசியம் தேவை. ஆறு பாடசாலைகளுக்கு மட்டும் கணனிகள் கிடைத்தன. அதில் இரண்டு கணனிகள் பழுதடைந்துவிட்டன.

கணனிகளை மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்த மின்சாரம் தேவை. நாம் மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி கணனிகளை இயக்கிப் பயன்படுத்தினாலும் சகல பாடசாலைகளுக்கும் மின்பிறப்பாக்கிகளை பயனபடுத்த முடியாதநிலை காணப்படுகிறது.

இவற்றைவிட அரசினால் எமது வலயப் பாடசாலைகளுக்குரிய பாடப் புத்தகங்கள் மற்றும் ஆசிரிய வழிகாட்டி நூல்கள் உரிய நேரத்தில் அனுப்பி வைக்கப்படுவதில்லை. அப்படி அனுப்பி வைக்கப்படும் புத்தகங்களில் தமிழ் மொழிக் கொலைகள் இடம்பெற்றுள்ளன.

எழுத்துப்பிழைகள் மலிந்து காணபடும் பாடப் புத்தகங்களினால் மாணவர்கள் தமிழ் மொழிப் பாடங்களைக் கற்பதில் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். தமிழ்மொழிப் பாடப் புத்தகங்களில் காணப்படும் எழுத்துப் பிழைகளைத் திருத்தும் செய்வதிலும் மாணவர்களுக்கு தமிழ் மொழியை ஒழுங்காகக் கற்பிப்பதிலும் தமிழ்க் கல்விக்கழகமும் தமிழ் வளர்ச்சிக் கழகமும் பெரும் பங்காற்றிவருகின்றன.

சகல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாணவர்களின் கல்வி நிலை முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. எமது வலயத்தில் 750இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவும் நிலையிலும் பாடசாலைகளில கடமையிலுள்ள ஆசிரியர்களின் அர்ப்பணிப்புகள் நிறைந்த பணி பாராட்டுக்குரியது. நேரம் காலம் பாராது பணிபுரியும் ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் மாணவர்களின் கல்வி நிலை வெற்றிகரமாகப் பேணப்பட்டு வருகின்றன - என்று அவர் தெரிவித்தார். (ஐ-12)

## சண்முகரத்தினம் ஞாபகார்த்த கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகம் அமரர் செ.சண்முகரத்தினம் ஞாபகார்த்தமாக நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நான்கு பேர்கொண்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் இமையாணன மத்திய விளையாட்டுக்கழகமும் 6பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான போட்டி மற்றும் "செற் அப்" போட்டி ஆகியவற்றில் புத்தூர் கலைமதி வி.கழகமும் சம்பியன்களாகின.

இச்சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் கடந்த புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 6பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் புத்தூர் கலைமதி வி.கழகமும், இமையாணன் மத்திய வி.கழகமும் மோதின. இதில் 2 - 0 என்ற சுற்றுக்கணக்கில் வெற்றிபெற்று புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

அடுத்து இடம்பெற்ற நான்கு நபர் கொண்ட அணிகளுக்கான போட்டியின் இறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் வரணி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் 30-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டியது.

இறுதியாக நடைபெற்ற "செற் அப்" ஆட்டத்தில் புத்தூர் கலைமதி வி.கழகமும் வல்வெட்டி குணசேகர வி.கழகமும் மோதின. இதில் 3-1 என்ற செற்கணக்கில் புத்தூர் கலைமதி வி.க வெற்றிபெற்று சம்பியனாகியது.

வெற்றிபெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவனேசன், செ.கஜேந்திரன் ஆகியோர் வழங்கினார் (ஒ-5)

## உதைபந்தாட்டத்தில் மோதல்; புலிகள் தலையிட்டு சமரசம்

வலி.வடக்கு,ஏப்.22

உதைபந்தாட்டப் போட்டியின் போது ஏற்பட்ட கைகலப்பினால் பல வீரர்கள் காயங்களுக்கு உள்ளாகினர்.

கடந்த திங்கட்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த கழகத்திற்கும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த கழகத்திற்கும் இடையே எழுந்த வாய்த்தகராறே தடிகள், பொல்லுகள் கொண்டு மோதிக்கொள்ளும் அளவிற்குச் சென்றது.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தலையிட்டு சண்டையில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து கலைந்துசெல்ல நடவடிக்கையெடுத்தனர். (ஒ-5-86)

## வீரவேங்கை காவேரி நினைவாக வலைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.22

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் வட அல்வாய் இளங்கோ விளையாட்டுக்கழகம் நடத்தும் வீரவேங்கை காவேரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணி முதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 4மணி-கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.க. எதிர் அல்வாய் நக்கீரன் வி.க.

☆ தேவரையாளி யங்லயன்ஸ் வி.க எதிர் அண்ணாசிலையடி இளைஞர் வி.க.

☆ வல்லை வி.க. எதிர் அல்வாய் மனோகரா வி.க.

☆ வதிரி பொமேஸ் வி.க எதிர் தொண்டமனாறு கலைவாணி வி.க.

☆ அல்வாய் விக்கிரமன்ஸ் வி.க. எதிர் கூவில் தீபஜோதி வி.க.

☆ நெடியகாடு இளைஞர் வி.க. எதிர் கம்பர் மலையங்கம்பன்ஸ் வி.க.

இதேவேளை -

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

கழகத்தலைவர் மு.ராஜவரோதயன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறைப் பிரதேசச் செயலர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள், வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சி.பாப்பா மற்றும் வடமராட்சி மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி வ.வர்ணா ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-5)

## உள்ளக உதைபந்தாட்டப் போட்டியை இவ்வருடம் நடத்த யாழ். லீக் முயற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் 5பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உள்ளக உதைபந் தாட்டப் போட்டியை இவ்வருடம் நடத்த முயற்சி மேற்கொண்டு வருகிறது.

வருடா வருடம் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் ஏ, பி மற்றும் சி பிரிவுச் சுற்றுப் போட்டிகள், விலகல் முறைப் போட்டிகள் என்பவற்றுடன் 15வயதுக்குட்பட்டோருக்கான சுற்றுப போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

அத்துடன், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அமரர் ஜே.எஸ்என் ஆனந்தராசா நினைவாக வடக்கு - கிழக்கு லீக்குகளிலிருந்து தலா ஒவ்வொரு அணிகள் பங்குபற்றும் போட்டி ஒன்றையும், அத்தோடு யாழ்ப்பாண லீக்குடன் இணைந்துள்ள கழகங்களுக்கான போட்டிகளையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் போட்டிகளை நடத்துவதற்கான மைதான வசதிவாய்ப்புக்கள இல்லாதிருந்தமையால் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தது என்றும்-

தற்போது யாழ் துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமையால் திட்டமிட்டபடி போட்டிகளை நடத்துவது இலகுவாக இருக்கும் என்றும் -

கடந்த வருடம் அறிமுகப்படுத்த இருந்த அணிக்கு 5பேர் கொண்ட உளளக உதைபந்தாட்டம் இவ்வருடம் நடத்தப்படலாம் என்றும் - யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.(ஒ-5)

### விளையாட்டுத் தூதராக லாரா நியமனம்

டிரினிடாட்,ஏப்.22

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர் லாரா நேற்று முன்தினம் டிரினிடாட் சென்றார். விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. டிரினிடாட் அதிபர் அவரை வரவேற்றார். அப்போது அவர் லாராவை டிரினிடாட் நாட்டு விளையாட்டுத்தூதராக நியமிப்பதாக அறிவித்தார்.

அதிரடி ஆட்டக்காரரான லாரா இங்கிலாந்துக்கு எதிராக 400ரன் குவித்ததால் இந்தப் பதவி அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணிகளுக்கிடையில் நடத்தும் எவரெடி கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் ஆட்டத்தில் பதுளை உதைபந்தாட்ட லீக் அணியும், யாழ் உதைபந்தாட்ட லீக் அணியும் மோதவுள்ளன. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.22

தமிழீழ விளையாட்டுத்துறை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் டயானா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

பிற்பகல் 2.30 மணிக்கு ஊரெழு றோயல் வி.க. எதிர் கரவெட்டி நவசக்தி வி.க.

பிற்பகல் 3.45 மணிக்கு நாவாந்துறை சென்மேரிஸ் வி.க. எதிர் ஏழாலை ஞானமுருகன் வி.க.(ஒ-5)

### ஷேவாக் திருமணம்

புதுடில்லி,ஏப்.22

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக். இவர் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த டெஸ்டில் 309 ரன்கள் குவித்து சாதனை படைத்து அந்த டெஸ்டில் இந்தியா வெற்றி பெறக் காரணமாக இருந்தார்.

இவருக்கு இன்று டில்லியில் திருமணம் நடக்கிறது. கல்லூரி மாணவி ஆர்த்திசிங்கை மணக்கிறார். ஆர்த்தி நடுத்தர ஜாட் குடும்பத்தைச் சேர்ந்தவர். திருமணத்தில் இந்திய அணி வீரர்கள், முன்னணித் தலைவர்கள் கலந்துகொள்கிறார்கள்.



பிஜி நாட்டில் இடம்பெற்ற நீர்ச்சறுக்குப் போட்டியில் பெரு நாட்டில் வீராங்கனை சோபியா முலனோவிச்.

## ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் பல்கலை. கோல்ட்ஸ் அணி வெற்றி

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ்மாவட்ட ரீதியாக நடத்திய 7 நபர் கொண்ட அணிகளுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுபபோட்டியில் யாழ்பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

# விளையாட்டு

முன்னதாக இடம்பெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அணியும், வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இவ்வாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அணி 1-0 என்ற கோல் கணக்கில்வென்று மூன்றாமிடத்தைப் பெற்றது இவ்வாட்டத்தின் நாயகனாக பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அணியைச் சேர்ந்த ஜி.ஏ.கிறேஷியன் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்ததாக இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணியும், கிராஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டத்தின் முதல் பாதியில் எந்த அணியும் கோல் பெறவில்லை.

இதனையடுத்து ஆட்டத்தின் இரண்டாம் பாதியில் யாழ்பல்கலைக் கழக கோல்ட்ஸ் அணி வீரர் பி.திலீபன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனதணிக்காக கோல் ஒன்றைப்பெற்றுக்கொடுத்தார்.

இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் யாழ்.பல்கலைக் கழக அணி வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

இவ்வாட்டத்தின் சிறந்தவீரராக பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணியைச் சேர்ந்த என்.ஜேம்ஸ் கொடிங்ரன் தெரிவுசெய்ப்பட்டார். (ஒ-5)

## கடல்வளப் பாடத்தில் 98 சதவீதமானோர் சித்திபெற்றனர்.

யாழ்ப்பாணம்,ஏப்.22

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கடல்வளப் பாடத்திற்கு வடக்கில் இருந்து தோற்றிய மாணவர்களில் 98 சதவீதமானோர் சித்தியடைந்துள்ளனர் என்று தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். அலுவலகம் தெரிவித்தது.

கடந்தவருடம் முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் பாடத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசப் பாடசாலைகளில் இருந்து தோற்றிய 98 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை தொண்டர் ஆசிரியர்களே கற்பித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-7)

# நிரந்தரக் கிராம அலுவலரை மறவன்புலோவுக்கு நியமிக்குக

## அப்பகுதி மக்கள் வேண்டுகோள்

தென்மராட்சி,ஏப்.22

மறவன்புலோப் பகுதியில் மக்கள் தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றனர். ஆகவே, இப்பிரிவுக்கு நிரந்தரக் கிராம அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு இப்பிரிவு மக்களும் பொது அமைப்பினரும் யாழ். அரச அதிபரையும் தென்மராட்சிப் பிரதேச செயலரையும் கோரியுள்ளனர்.

1999ஆம் ஆண்டு இப்பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்தனர். அதனைத தொடர்ந்து அங்கு கடமையாற்றிய கிராம அலுவலர் வேறு பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அப்பிரிவுக்குத் தற்போது பதில் கிராம அலுவலரே கடமையாற்றி வருகின்றார். இந நிலையில், மறவன்புலோ மேற்குப பகுதியில் உள்ள சனசமூக நிலையம் வரை மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். விரைவில ஏனைய பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர் என்று கூறப்படுகிறது. மேலும் பல குடும்பங்கள் மீளக்குடியமரப்படவுள்ளன. ஆகவே நிரந்தர கிராம அலுவலரின் சேவை இப்பகுதிக்கு அவசியமென்பதால் இப்பிரிவுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் இப்பிரிவில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்குத் தற்காலிகக் குடியிருப்புக்கள் அமைக்கவும், அத்தியாவசிய உதவிகளை வழங்கவும் முன் வந்துள்ளதாகவும் -

இது தொடர்பாக அண்மையில் தூதுவராலய அதிகாரிகள் இப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பட்டினிக்கு·எதிரான இயக்கமும் இப்பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

## வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் பெறும்படி அறிவிப்பு

தெல்லிப்பழை,ஏப்.22

வலி.வடக்கில் கட்டாக்காலி நாய்களை அழிக்க சுகாதார சேவைகள் பிரிவினரின் ஒத்துழைப்புடன் வலி.வடக்கு பிரதேசசபை நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. இதனால் நாய்கள் வளர்ப்போர் தமது நாய்களுக்கான உரிமங்களைப் பெற்று அவற்றை கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு நடவடிக்கைகளின்போது தமது வளர்ப்பு நாய்களின் கழுத்தில் அணிவித்து தமது நாய்களை பாதுகாத்துக்கொள்ளுமாறு பிரதேசசபை நிர்வாகம் பொதுமக்களை கோரியுள்ளது.

(ஒ-150)


# கண்ணீர் அஞ்சலி



## இராஜ ஸ்ரீகாந்தன்

(முற்போக்கு எழுத்தாளர், ஊடகவியலாளர், மொழி பெயர்ப்பாளர்)

அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அரியாலை. (31140)(34) திரு.இ.உமாசங்கர் குடும்பத்தினர்.



# WANTED - ADMINISTRATOR

AROD is looking for an Administrator, with a Commitment and keen interest in Serving the Disabled.

The Applicant Should be able to work as a Member of a Multidisciplinary team to serve the Disabled, Maintain accounts, and Supervise staff. The Applicant Should be Proficient in English and Tamil and be able to Prepare Project proposals for funding and Capable of implementing them in the field.

The remuneration will be modest. but negotiable

Please apply before 10.05.2004, with testimonials of Previous Employment, proof of ability and salary expected. Applications written in your own Handwriting will be Preferred.

**Secretary**
**Association for Rehabilitation of the Disabled,**
**47/2, Adiyapatham Road, Thirunelvely North, Jaffna.**

(C/34583) (26)



# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த
தம்பாலை - சுதிரிப்பாய் கிராம உத்தியோகத்தர்

திரு.க.துரைராஜா அவர்களின் அன்பு மகன்

## செல்வன் துரைராஜா சாருஜன்

*அவர்களின் அகால மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

உதவிப் பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய். (சி34586) (21-16-17)


## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஏப்.22

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ் பிராந்திய அலுவலகம் நடத்தும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளைய நிகழ்வு மாலை 5.30 மணியளவில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் மாவட்ட நீதிவான் விகடகவி மு.திருநாவுக்கரசு 'இந்து சமயத்தின் இன்றைய நிலை' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(ஒ-5)

## உரிமத்தகடு விநியோகம்

தெல்லிப்பழை,ஏப்.22

வலி.வடக்கில் வீதிகளில் செல்லும் சைக்கிள்கள் முக்கிய சந்திகளில் மறிக்கப்பட்டு இவ்வாண்டுக்கான வரி உரிமத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மல்லாகம் சந்தியில் இந்நடவடிக்கையில் கடந்த இரு தினங்களாக பொலீஸாரின் உதவியுடன் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஒ-150)


# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்





அமரர் **சின்னத்தம்பி இராஜரட்ணம்**
பிறப்பு: 22.03.1938
இறப்பு: 20.04.1996

செல்வி **இராஜரட்ணம் கௌசலாதேவி**
பிறப்பு: 18.04.1975
இறப்பு: 20.04.1996

திதி: 22.04.2004

ஆண்டுகள் எட்டு கடந்து ஓடிவிட்ட போதிலும்
உங்கள் அன்பும் பண்பும் நிறைந்த
பசுமை நினைவுகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும்.

- குடும்பத்தினர்.

*இராச வீதி,*
*சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.* (C34585)(34-21-18-17)



# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகலிங்கம் புஸ்பராணி

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி யோகலிங்கம் புஸ்பராணி அவர்கள் நேற்று (21.04.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை மற்றும் நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா -அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் யோகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சுகிர்தா (லண்டன்), குமுதா ஆகியோரின் அருமைத் தாயாரும் கமலஸ்ரீ (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் கருணாகரன் (கனடா), ஜெயராணி (கனடா), நவந்தினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2004) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப், பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.யோகலிங்கம் (கணவர்),
யோ.குமுதா (மகள்).

*அம்பத்தை,*
*அளவெட்டி மத்தி, அளவெட்டி.*
(31144)(34)



## மகாலிங்கம் சதீஷ்குமார் (டோச்சன்)

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சதீஷ்குமார் (டோச்சன்) 17.04.2004 சனிக்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் மகாலிங்கம் - கனகமணி தம்பதியரின் அன்பு மகனும் அ.சி.ஜீவரட்ணம் (சாம்பங்காளர், சின்னையா அன்சன்ஸ், 44,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) - புவனேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும கிறிஸ்ரின் குமுதினி அவர்களின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (ஜேர்மனி), கீதாஞ்சலி (ஜேர்மனி), சசிகுமார் (ஹொலண்ட்), ராஜ்குமார் (ஹொலண்ட்), கனிஸ்குமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் சிவலிங்கம், கணேசலிங்கம் (ஹொலண்ட்), அரசலிங்கம் (பாறின்), வரதலிங்கம் (ஹொலண்ட்), மகாலிங்கம் ஆகியோரின் பெறாமகனும் சந்திரலீலா, இந்திரலீலா, புஸ்பலீலா ஆகியோரின் அன்பு மருமகனும் செல்வராசா (நியூலங்கா பாம், இணுவில்),கந்தசாமி, திருச்செல்வம் ஆகியோரின் மருமகனும் செல்வமணி மகாலிங்கத்தின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் கிரியைகள் 24.04.2004 சனிக்கிழமை ஹொலண்டில் பிற்பகல் 2.00மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். அன்னாரின் நினைவஞ்சலி ஆராதனை வழிபாடு அன்று மாலை 7.00மணிக்கு மாமனாரின் இல்லத்தில் நடைபெறும்.

*541, அ.மி.த.பாடசாலை அருகில்,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (31141) (26-16-17)

தகவல்:
அ.சி.ஜீவரட்ணம்
(சாம்-மாமனார்).



## ஆ.நாகலிங்கம் (சின்னராசா, கட்டடக்கலைஞர்)

மாலிசந்தி, தாரிக்கப்பற்றைச் சேர்ந்த ஆ.நாகலிங்கம் அவர்கள் நேற்று (21.04.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும் மணிவண்ணனின் பாசமிகு தந்தையும் திருமதி மணிவண்ணன் தனலட்சுமியின் அன்பு மாமனும் வே.சடகோபன், வே. இராசரத்தினம், திருமதி நல்லராசா, தவமலர்தேவி, நா.யோகநாதன், திருமதிகள் பரமதாஸ் யோகரத்தினம், பகீரதன் யோகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா யோகமலர் ஆகியோரின் ஆசையப்பாவும் திருமதி நா. அன்னலட்சுமியின் மைத்துனரும் யாழ்.அரியாலை திருமதி சுப்பிரமணியம் செல்லக்கண்டுவின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வதிரிஆலங்கட்டை மயானத்தில் தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அழகு இல்லம்,*
*மாலிசந்தி.* (C/34592)(16-17-40)

தகவல்:
குடும்பத்தினர்.



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 570 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 20-04-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4643653-4655863 |

வெற்றி இலக்கங்கள் 24 41 42 54

லக்கினம் கடகம்

ஜக்பொட் பரிசு ரூபா.12,38,750/- வெல்லப்பட்டுள்ளது. இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,67,204 | 10 | 26,72,040 |
| 2.இலக்கங்கள் | 24,641 | 20 | 4,92,820 |
| 1.இல + லக்கினம் | 24,271 | 30 | 7,28,130 |
| 2.இல + லக்கினம் | 2,138 | 100 | 2,13,800 |
| 3.இலக்கங்கள் | 644 | 500 | 3,22,000 |
| 3.இல + லக்கினம் | 64 | 5,000 | 3,20,000 |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000 | 3,00,000 |
| 4.இல + லக்கினம் | 01 | 12,28,750 | 12,28,750 |
| மொத்தம் | 3,18,966 | - | 62,77,540 |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,77,540

4648993-7-87
4652672-0-49
4646623-0-90
4653280-3-85
4644594-87-1

அபிவிருத்தி லொத்தர் சபை



## ஓட்டோ விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒட்டோ விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**V.J.தேவதாசன்**
86/1. கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(Forut அருகில்)



## தேவை

பிரபல எலக்ரோனிக் நிறுவனத்திற்கு விற்பனையாளர் தேவை. இருபாலாரும் நேரில் சமுகம் தரவும்.

01C, **ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(வின்சர் தியேட்டர் அருகில்)
(C/34578)



## சமையலுக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற உல்லாச விடுதிக்கு உள்ளூர், மேல்நாட்டு உணவுவகைகளைச் சமைக்கக்கூடிய சமையலாள் தேவை.

**தொடர்பு:**
**விளம்பர இல.2234,**
**C/O உதயன்,**
**யாழ்ப்பாணம்.**
(31134)






விஞ்ஞானச் சங்க ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகவேந்தர் ம.சிவசூரிய, விஞ்ஞானச் சங்கத்தின் புதிய தலைவர் எஸ்.இராசதுரை, யாழ். மருத்துவபீட பீடாதிபதி டாக்டர் கே.சிவபாலன், வணிகபீட பீடாதிபதி மா.நடராஜசுந்தரம், பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி), பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: தேவா)

# அழிந்துபோன வளங்களைக் கட்டியெழுப்ப விஞ்ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும்

## விஞ்ஞானச் சங்க ஆண்டு விழாவில் வேந்தர் சிவசூரிய உரை

யாழ்ப்பாணம்,ஏப்.22

நாட்டில் கடந்த 20 வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தினால் வடக்கு - கிழக்கு மக்களின் சமூக, பொருளாதார வளங்கள் அழிந்து போயுள்ளன. இந்த வளங்களை மீளக் கட்டியெழுப்ப விஞ்ஞானத்தை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் ஆண்டு விழா நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தம் பல அழிவுகளை எம்மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. உணவு, உடை, இல்லிடம், நீர், மின்சாரம், தொலைத் தொடர்பு, போக்குவரத்துப்



போன்ற அத்தியாவசிய வசதிகளை எமது மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை.

யுத்தம் எமது பிரதேசத்தில் அதிகளவான வலுவிழந்தோரை உருவாககியுள்ளது. ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாயி நகரங்களில் ஏற்பட்டது. போன்ற நிலைமைகள் எமது மண்ணில் இடம்பெறக்கூடாது.

விஞ்ஞானத்தின் மூலம் மக்களின வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டும். ஆராய்ச்சியில்லாத விஞ்ஞானமும், விஞ்ஞானம் இல்லாத ஆராய்ச்சியும் பிரயோசனமற்றவை. யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகச் செயலாற்ற வேண்டும் - என்றார்.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின 12 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நேற்றுக்காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகின.

யாழ். பல்கலைக்கழகவேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்துவைத்தார்.

பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், பேராசிரியர், எஸ்.இராஜதுரை, டாக்டர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா ஆகியோர் தலைமையில் நேற்றைய அமர்வுகள் நடைபெற்றன. பொறியியலாளர் எஸ்.ஞானேந்திரன், வாழ்நாள் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி), பேராசிரியர் ஏ.சண்முகதாஸ், விரிவுரையாளர் எஸ்.என்.சுரேந்திரன், டாக்டர் எஸ். மகேசன், டாக்டர் அசோகன் அமரசிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

நேற்றைய நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ் மோகனதாஸ், வணிகபீட பீடாதிபதி மா.நடராஜசுந்தரம், மருத்துவபீட பீடாதிபதி டாக்டர் கே.சிவபாலன் ஆகியோா உட்படப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### இன்றைய நிகழ்வுகள்

இன்றைய இரண்டாம் நாள் அமர்வுகள் கலாநிதி திருமதி சிவமதி சிவசந்திரன், பேராசிரியர் கே.கந்தசாமி, பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) ஆகியோர் தலைமையில் நடைபெறும். டாக்டர் கே.சிவபாலன், டாக்டர் திருமதி கே.சுப்பிரமணியம் ஆகியோர் கருததுரைகளை வழங்குவார்கள். (ஒ-8)

# கற்றல், கற்பித்தல் மேம்பாட்டுக்கு சிறுவர் அரங்கச் செயற்பாடுகள்

வலி.தெற்கு,ஏப்.22

வடக்கு - கிழக்கு மாகாண ஆரம்பக் கல்வி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் விருத்தியை ஏற்படுத்தவும், மாணவர்களின் ஆளுமையை விருத்திசெய்யவும், சிறுவர் அரங்கச் செயற்பாடுகளை இம்முறை சிறப்பாக மேற்கொள்ள மாகாணக் கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்விப் பிரிவு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இச்சிறுவர் அரங்கு பாடசாலை மட்டம், வலயமட்டம், மாகாண மட்டம் ஆகிய நிலைகளில் விழாவாக நடத்தப்பட்டு, அவற்றில் பங்குபற்றும் சகல சிறுவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு மட்டத்திலும் நடத்தப்படும் விழாவிலும் சிறப்பாக உள்ள சிறுவர் நாடகம் ஒன்று தெரிவுசெய்யப்பட்டு அடுத்தமட்ட விழாவில் பங்குபற்ற வைக்கப்படும்.

இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் சிறுவர் நாடக அரங்குக்கான முன் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமம் கல்விவலயத்தில் கோட்டமட்டத்திலான சிறுவர் நாடக அரங்கப் போட்டிகள் மே மாதத்தில் நடைபெறவுள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில் கோட்டங்களில் நடைபெறும் போட்டிகளுக்கான இடங்களும் திகதிகளும் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் கல்வி வலய மட்டத்திலான போட்டிகள் ஜூன் மாத முதல்வாரத்தில் நடத்தப்படவுள்ளன.

மாகாண மட்டத்திலான சிறுவர் நாடக அரங்கு நிகழ்வு ஜூலை மாதத்தில் விழாவாக நடத்தப்படும்.

இது பிரதேச ரீதியிலான மாகாண மட்ட சிறுவர் அரங்க விழாவாக திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் நடத்தப்படும் எனவும் வடக்கு - கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளா மு.இராதாகிருஷ்ணன் இத்தகவல்களை வெளியிட்டுள்ளார். (ஒ-152)

# புலிகளைப் போரில் ஈடுபடாது வைத்திருப்பதே அரசின் நோக்கம்

## மு.கா. தலைவர் கூறுகிறார்

விடுதலைப் புலிகளைப் போரில் ஈடுபடாது வைத்திருப்பதே அரசின் நோக்கமாகும். முன்னைய அரசும் அவ்வாறே செயற்பட்டது. யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்படும்போது உரிய நடவடிக்கை எடுப்பதற்குக் களநிலைவரம் தடையாகவுள்ளது என்பதே யதார்த்தம் ஆகும்.

- இவ்வாறு தெரிவித்தார், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென்று கடந்த அரசின் மீது குற்றம் சுமத்திய ஜனாதிபதி, தாம் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றபின்னர் அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் மேற்கொண்டாரா?

விடுதலைப் புலிகள் கிழக்கில் இருந்து கருணாவை அகற்ற வடக்கில் இருந்து நகர்ந்தபொழுது அவர்களைத் தடுக்க ஜனாதிபதியால் முடிந்ததா? இவை அனைத்தும் களநிலைவரத்தின் யதார்த்தத்தை மீறிச் செயற்படமுடியாது என்பதை உணர்த்தவில்லையா?

கடந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது நாடாளுமன்ற ஆசனங்களை ஜே.வி.பியிடம் பறிகொடுத்துள்ளது. அத்துடன், ஜே.வி.பி. தனது ஆசனங்களை நான்கு மடங்காக அதிகரித்துக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் ஜே.வி.பியைச் சேர்ந்த ஒருவர் பிரதமராகக் கூடிய அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது - என்றார் அவர். (ஒ-ரி)

# தோட்ட மண்வெட்டிகளுக்கு வலி. மேற்கில் தட்டுப்பாடு

வலி.மேற்கு,ஏப்.22

வலிகாமம் மேற்குப் பிரதேசததில் தோட்ட மண்வெட்டிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேசம் சுமார் 2ஆயிரத்து 100 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்பையும் சுமார் 9 ஆயிரம் விவசாயக் குடும்பங்களையும் கொண்ட பிரதேசமாகும். இப்பகுதியில தோட்ட மண்வெட்டிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. தோட்ட மண்வெட்டிகள் தொல்புரம் கமநல சேவை நிலையத்தினூடாக விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் , அங்கு மண்வெட்டிகள் தற்போது கையிருப்பில் இல்லை என்று கூறப்படுகிறது. இதனால், விவசாயிகள் தனியார் கடைகளில் அதிக விலைக்குத் தோட்ட மண்வெட்டிகளைப் பெற்று வருகின்றனர். தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளுககுத் தேவையான சகல உள்ளீடுகளும் தற்போது இருக்கின்றன. ஆனால், தோட்ட மண்வெட்டிகள் மட்டும் இல்லை.

வலி. மேற்குப் பிரதேச விவசாயிகளுக்குத் தொல்புரம் கமநலசேவை நிலையத்தின் மூலம் தோட்ட மண்வெட்டிகள் கிடைப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுகக வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-175)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ஒ-ரி)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.22

மூளாய், வதிரன்புலோ ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள காலை 9 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

☆ ☆ ☆

மாதகல,ஏப்.22

மாதகல், நுணசை ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10-95)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.22

பருத்தித்துறை, கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 25 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் இந்த உற்சவநிகழ்வில் எதிர்வரும் 3ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10-ரி-15)

☆ ☆ ☆

வட்டுக்கோட்டை,ஏப்.22

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நணபகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10-161)

☆ ☆ ☆

வட்டுக்கோட்டை,ஏப்.22

அராலிமத்தி, உலோவை சிட்டிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிறுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10-161)

☆ ☆ ☆

சுதுமலை,ஏப்.22

காரைநகர், கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-139)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.22

சண்டிலிப்பாய், சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 4 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 5 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று மஹோற்சவம் நிறைவுபெறும் (ஒ-8-173-135)

☆ ☆ ☆

வடமராட்சி,ஏப்.22

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந்த மஹோற்சவத்தின் இரதோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தோற்சவம் சித்திராபௌர்ணமி தினமான 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் இடம்பெறும். (ஒ-8-173)

☆ ☆ ☆

குருநகர்,ஏப்.22

அரியாலை யூதாததேயு யாத்திரை தலத்தின் வருடாந்த திருவிழா ஆராதனைகள் இம்மாதம் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

திருநாள் திருப்பலி எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு யாழ். மறைமாவட்டக்குரு முதல்வர் வண.பிதா. ஜே.நீக்கிலஸ் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்படும். (ஒ-8-51)

☆ ☆ ☆

கைதடி,ஏப்.22

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 12.15 மணிக்கு கொடியேற்றததுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் இருகாலங்களில் திருவிழா நடை பெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமையும், தீர்த்தத திருவிழா மறுநாள் செவ்வாய்க்கிழமையும் நடைபெறும். (ஒ-8-75)

☆ ☆ ☆


வலி.தெற்கு,ஏப்.22

வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஏழாலை மத்தி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 4 ஆம் திகதி வரை 11 நாள்கள் நடைபெறவுள்ளன.

இதே ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் பெருவிழா ஜூன் மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-152)

# சாயி சிந்தனை

## நாமெல்லாம் கடவுளின் நிழல்கள்



எப்பொழுதும் எச்சரிக்கையாய் இருங்கள். உங்கள் உண்மைச் சொரூபம் வேறு. உங்கள் உடலிலிருந்து வேறுபட்டவர்கள் நீங்கள். உங்கள் உடல் இல்லை என்பதை உணருங்கள். இதுவே உங்களை நோய்களிலிருந்து காப்பாற்றும். உங்கள் நடவடிக்கைகளில் ஒரு வித சீலபம் ஏற்படுத்தும்.

நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளின் நிழல்கள். அவரது உருவம்தான் நீங்கள். இப்படி நினைத்தால் உங்களுக்குத் துன்பம்தான் ஏது. கடவுள் எப்பொழுதும் சத்தியத்தின் அருகிலேயேதான் இருப்பார். அவரது நிழலாகிய திருப்பாதங்களை நம்பிக்கையுடன் பற்றிக் கொள்ளுங்கள். உங்களுக்குத் துன்பமே வராது.

(சத்திய சாயி பாபா)

# இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.

"தொழிலுக்கும் தொல்லையில்லை...
வீட்டு வேலைக்கும் தொந்தரவில்லை !



ரொஷான் சாமிக்க விக்ரமசிங்ஹ
தொடர்புபடுத்தும் அதிகாரி
ஓஷனிக் லொஜிஸ்டிக் (பிரைவேட்) லிமிட்டட்

"முன்பு என்னிடம் ஒரு ரீ-கண்டிஷன் மோட்டார் சைக்கிள் தானிருந்தது. பெற்றோல் செலவுக்கென்றே அதிகளவு பணம் விரயமானது. தற்செயலாக பத்திரிக்கையில் Caliber 115 மோட்டார் சைக்கிளின் விளம்பரத்தைப் பார்த்தேன். அக் கணமே எனக்கேற்ற மோட்டார் சைக்கிள் இதுவே என்று முடிவு செய்ததோடு, பினான்ஸ் முறையில் Caliber 115 மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கினேன்.

என்னுடைய தொழிலைப் பொறுத்தவரையில் துறைமுகம், ஷிப்பிங் லைன் தொகுதிகள் மற்றும் வங்கிகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் போகவேண்டியிருக்கும். எந் நேரமானாலும் குறிப்பிட்ட இடத்திற்கு, குறித்த வேளையில் போகவேண்டுமென்பதால் நான் Caliber 115 மோட்டார் சைக்கிளையே பயன்படுத்திவருகின்றேன். அது வீட்டு வேலைகளுக்கும் வசதியானது. திருமணங்களுக்குக் கூட நான் Caliber 115 ல் தான் பயணம் செய்கிறேன்.

Caliber 115 மோட்டார் சைக்கிளின் கவர்ச்சிகரமான தோற்றம், டிஸ்க் பிரேக், பிரகாசமான ஹெலஜன் லைட் ஆகிய அம்சங்கள் எனக்கென்றே அமைக்கப்பட்டது போல் நான் கருதுகிறேன். K - Tec தொழில்நுட்பம் கொண்டதால் பெற்றோலுக்கு ஆகும் செலவும் குறைவு தான்.

மோட்டார் சைக்கிளை வாங்கிய நாள் முதல் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் உதிரிப்பாக சேவை வலையமைப்பினர் வழங்கும் சேவையானது அளப்பரியது. எமது அலுவலகத்தில் பணியாற்றும் அநேகமானோர் இப்பொழுது பஜாஜ் மோட்டார் சைக்கிளைத் தான் பயன்படுத்துகின்றார்கள்."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின்
பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள்,
அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

**Caliber 115**

**DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி: 4700600. தொலைநகல்: 4700677, 2687175.
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு: 4715050.
இணைய தளம்: http://www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள்: நீர்கொழும்பு, பக்கலை, மத்துகமை, கண்டி, நுவரெலியா, மாத்தறை, அனுராதபுரம், தெஹிஅத்தக்கண்டிய, பதுளை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, அம்பாறை, திருகோணமலை, மொனறாகலை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

mel ads 04/04/3183

# ஒரு வருட உத்தரவாதத்துடன்

அவுஸ்திரேலியாவிலிருந்து மலிவு விலையில்
இறக்குமதி செய்யப்பட்ட

**IBM, COMPAQ, DELL**
**(Used Computer)**

உங்கள் குடும்பத்தின் கட்டுப்படியான
விலையான ரூ15000 லிருந்து






# இதோ! SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கான
சகலவிதமான காலுறைகள் (Socks)
வகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



## ஸ்ரீமுருகன்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C/34581)(12-37) T.P: 021 2225892


## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோகம்

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட மணல் விநியோகம் மீண்டும் 24.04.2004 சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. முன்பு வழங்கப்பட்ட திகதிகள் பின்வரும் ஒழுங்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

| முன்னர் வழங்கப்பட்ட திகதி | மாற்றப்பட்ட மணல் வழங்கும் திகதி |
|---|---|
| 01.04.2004 | 24.04.2004 |
| 02.04.2004 | 29.04.2004 |
| 08.04.2004 | 30.04.2004 |
| 09.04.2004 | 06.05.2004 |
| 15.04.2004 | 07.05.2004 |
| 16.04.2004 | 13.05.2004 |

முன்னர் போல் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மணல் விநியோகம் நடைபெறும்.

புதிய திகதிகள் பெறுவதற்காக 24.04.2004 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் வேலை நாள்களில் மணல் அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்துத் திகதி குறிப்பிட்டு மீளப்பெற்றுக்கொள்ளலாம்.

மணல் விநியோகப்பகுதி,
உபய கதிர்காமம்,
புலோலி,
பருத்தித்துறை.

\- நிர்வாகம்.

(சி34593)(37-12)


# NORTH EAST TECHNOLOGIES (NET)
# வட கிழக்குத் தொழில் நுட்பம்

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள்
குறைந்த விலைகளில்!
குறைவான கையிருப்பு மட்டுமே!!

PII 366 MHz - 64 Ram / 6 GB 21,100/=
(With Multimeedia Kit)

PIII 550 MHz - 128 Ram / 8 Gb 32,000/=
(With Mudom and Multimeedia Kit)

**Lop Top (Toshiba) கணனிகள்**

Intel P III 600 MHz 55,000/=
Intel Celeron 600 MHz 59,000/=

**No: 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.**

021 222 3786
0777 708498 (HOTLINE)

(சி-34582)(30-12-37)


## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் பரமேஸ்வரி

உடுவில் தெற்கு, புளியடி வயிரவர் கோயிலடியைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் பரமேஸ்வரி (20.04.04) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னததம்பி பொன்னம்மாவின் மகளும் காலஞ்சென்ற கந்தையா முத்துப்பிள்ளையின் மருமகளும் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் கௌரிதேவி, கௌரிக்குமார், சசிகலா (சுவிஸ்), சசிக்குமார் (சுவிஸ்), றதிகலா ஆகியோரின் தாயாரும் செந்தில்குமரேசன், காலஞ்சென்ற மாயாலட்சுமி, மங்கையற்கரசி, கமலேஸ்வரன (சுவிஸ்), ஜெயகௌரி (சுவிஸ்), உமாமுகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் டிலக்ஷன், சுவாரகன், சுவாதிகன், சாரங்கன், சாரங்கி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற சரஸவதி, மற்றும் ஆறுமுகதாஸ், குகதாஸ் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சபாபதி, செல்லையா, பொன்னம்மா, மற்றும் சண்முகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள நாளை (23.04.2004) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

*புளியடி வயிரவர் கோவிலடி,*
*உடுவில் தெற்கு.* (சி34595)


கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை

**இலவசம்**

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:

யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
(30331) யாழ்ப்பாணம்.



**நிறைஞ்சனாஸ்** சங்கானை



இன்று முதல்
அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ்
நடித்த
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இற்கு
BRUCE WILLIS நடித்த
**MERCURY RISING**
(சி34513)(21)

**நாகம்ஸ்** சுன்னாகம்

பிரசன்னா, அனு, வடிவேல்
புதிய வெளியீடான நடித்த
**காதல் டொட் கொம்**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C 34150)(12)

**ராஜா** யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த
**கில்லி**
10.30.,2.30,
6.30, 9.30
(பு.நே.)
(ரீலஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/34517)(22)


# மரண அறிவித்தல்கள்

## ஐயம்பிள்ளை கந்தையா



மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 20/33 வைரவர் கோவிலடி (கூழாவடி) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமான ஐயம்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (21-04-2004) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும் நாகேந்திரம் இராசம்மாவின் அன்பு மருமகனும் காமாட்சியின் அன்புக் கணவரும் றதி, சிறி (சுவிஸ்), ரமா, உமா (சுவிஸ்), ஜீவா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் இரத்தினம், நேசம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவலோகநாதன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சசிதரன் (சுவிஸ்), லலிதாம்பிகை (சுவிஸ்), இராஜேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற தங்கத்துரை மற்றும் சுந்தரலட்சுமி, பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற இராசலட்சுமியின் மைத்துனரும் சயந்தன் (பிரான்ஸ்), பிரசன்னா, விஜோகாந், சமர்த்தினி, லபோஜன், அர்ச்சனா (சுவிஸ்), ஆரணி (சுவிஸ்), சானுஜன் (சுவிஸ்), வினிஸ்காந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல,20/33 வைரவர் கோவிலடி,*
*(கூழாவடி ஒழுங்கை)*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(31148)(36-12-37)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## தம்பர் காசிப்பிள்ளை நடராசா (T.K.N)



காரைநகர் களபூமி, வளுப்போடையை பிறப்பிடமாகவும் கனடா ரொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பர் காசிப்பிள்ளை நடராசா நேற்று (21.04.2004) புதனகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஐயாத்துரை, காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற முருகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவஞானம் (லண்டன்), சிவபாதசுந்தரம், சிவலோகநாதன் (சுவிஸர்லாந்து), காலஞ்சென்ற சிவகுருநாதன், சிவகுமார (லண்டன்), கமலாதேவி (கனடா), தர்மகுமாரி, பிரகலாதீஸ்வரன் (கனடா) ஆகியோரின அன்புத் தகப்பனாரும் யோகராணி (லண்டன்), சாவித்திரிதேவி, சாந்தமலர (சுவிஸர்லாந்து), சங்கீதா (லண்டன்), சிறீஸ்கந்தராசா (கனடா), இராமகிருஷ்ணராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.4, குமாரசாமி றோட்,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
கனடா: TP.No - 001 416 - 7543191

தகவல்:
சிவபாதசுந்தரம் (மகன்).

(31150)(36-12-37)

## திருமதி கந்தசாமி முத்துமாணிக்கம்



பருத்தித்துறை, தும்பளை, பள்ளம்பாதியைப் பிறப்பிடமாகவும் 122/18, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி முத்துமாணிக்கம் அவர்கள் 20.04.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை இராசமமாவின் அன்பு மருமகளும் கந்தசாமி (ஓய்வுபெற்ற பொலீஸ உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் திருதிருமதி திருநாவுக்கரசு (திரு)வின் அன்பு மைத்துனியும் செல்வி க.நாகேஸ்வரி (மயூரா பாமஸி, கொழும்பு), சு.விஜயராணி (ஆனைப்பந்தி), ஸ்ரீகாந்தா (சுவிஸ்), ஸ்ரீகருணா (சுவிஸ்), ஸ்ரீ குலேந்திரன் (சுவிஸ்), ஸ்ரீரவி (சுவிஸ்), சோ.புஸ்பராணி (சுவிஸ்), மு.செல்வராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஸ்ரீரகு ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாபூஷணம் - சுந்தரலிங்கம் (ஓவியர்), சாந்தநாயகி (சுவிஸ்), தயாநிதி (சுவிஸ்), இராஜேஸ்வரி (சுவிஸ்), சிவபூரணி (சுவிஸ்), சோமசுந்தரம் (சுவிஸ்), ஸ்ரீமுருகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும கோபிநாத், ஸ்ரீசுதன், சுகிந்தன், சுபித்தா, ஸ்ரீசுகந்தன், சங்கரி, சௌந்தரி, பஜிதன், சுஜிதன், வஜிதன், அஸ்வினி, அஜிதன், அபிந்தினி, ஆகியோரின அன்புப் பேர்த்தியும் திருக்குமார் (கனடா), யு.சசிகலா, செந்தில்குமார் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் பிரியங்கா, டிலக்ஷிகா, பவிதன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (23.04.2004) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம், கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*122/18, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.* (C/34591)(38-12-37)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி மீனாட்சிப்பிள்ளை நடராஜா

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, வரணி மகா வித்தியாலயம்)**

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சிப்பிள்ளை நடராசா அவர்கள் நேற்று (21.04.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னபர் நடராஜாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக கணவரும் நல்லம்மா, துர்ரைராஜலிங்கம் (கனடா), இராஜேஸ்வா (கனடா), பரமேஸ்வரி (ஆஸ்திரேலியா), புவனேஸ்வரி, விமலேஸ்வரி ஆகியோரின அன்புச் சகோதரியும் கார்த்திகேசு, கனகசபாபதி, சரஸ்வதி, நல்லம்மா, உமையம்மை, இராமநாதன், குமாரசுவாமி, காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், இரத்தினம், இராஜரட்ணம், தியாகராஜா, மற்றும் சந்திரோதயம், இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், சௌந்தரராணி, மோகனவதனி (கனடா), சுகந்தினி (கொலண்ட்), சுபாஜினி (ஜேர்மனி), இளங்குமரன் (சுவிஸ்), கலைமதி (கனடா), மதுமதி (ஆஸ்திரேலியா), வானதி (கனடா), கௌதமி (அசிரியை), கோகுலன் (கொலண்ட்), சர்மௌா (யாழ்.பல்கலைக் கழகம்-நுண்கலைப்பீடம்) ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2004) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக மந்துவில் இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மந்துவில் மேற்கு*
*கொடிகாமம்.*

(31145)(12-37)

தகவல்:
நடராஜா
(கணவர்)

# முதலாவது பிறந்த தின வாழ்த்துக்கள்

## HAPPY BIRTHDAY

## PRAVINJA



அல்வாய் தெற்கு மாலி சந்தியைச் சேர்ந்த
திரு.திருமதி சிவபாலன் பிறேமலதா தம்பதிகளின்
செல்வப் புதல்வி

## செல்வி பிரவின்ஜா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (22.04.2004) வியாழக்கிழமை மாலி சந்தியில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

பிரவின்ஜா குட்டியை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணா, சிவாஜஜன், அம்மம்மா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணா, அக்கா, தங்கை, மச்சாள்மார், மச்சான்மார், தாத்தாமார் மற்றும் உற்றார், உறவினர், அனைவரும் பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றார்கள்.

அல்வாய்தெற்கு,
மாலிசந்தி

(30916)(40)

**A.சிவபாலன்.**
**(அப்பா)**

# புதிய அமைச்சரவை நேற்று முதற்றடவையாகக் கூடியது!

கொழும்பு, ஏப்.22

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஆனால், அரசின் முக்கிய பங்காளிக கட்சியான ஜே.வி.பியினர் சார்பில் எவரும் இக்கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

ஜே.வி.பியினர் சார்பில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்கள் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள இழுபறி காரணமாக அந்த அமைச்சுக்குப் பதவிகளை இன்னும் ஏற்கவில்ல என்பது தெரிந்ததே.

நேற்றயை அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

★அமைச்சர்களின உறவினர்களை சம்பந்தப்பட்ட அமைச்சின் முக்கிய பதவிகளுக்கு நியமிப்பதில்லை.

★தேர்தலில் தோல்வியுற்றவர்களை அரச திணைக்களத் தலைமைப் பதவிகளுக்கு நியமிப்பதில்லை.

★அரச கேள்விப் பத்திரம் கோரப்படும்போது அமைச்சரவை உப குழுவின் அனுமதி பெறவேண்டும்.

இவை போன்ற பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

நிதி அமைச்சர் சரத் அமுனுக நாட்டின் நிதி நிலை பற்றி விளக்கினார்.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பாக மேலும் ஆழமாக ஆராய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் அமைச்சரவைப் பேச்சாளரும் தெரிவு செய்யப்பட்டார். தகவல்துறை அமைச்சர் ஜெஹினோல்ட் குரே அப்பதவியை வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

என்றாலும், அமைச்சரவை முடிவுகளை வெளியிடமுன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவுடன் அது குறித்து ஆராயவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

இக்குழுவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பேரியல அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா, சரத் அமுனுகம, மங்கள சமரவீர, அதாவுல்லா ஆகியோர் அங்கம் வகிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-க)

# இன்று சபாநாயகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களிப்பு முக்கியமாகிவிடும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பின 22 எம்.பிக்களே சபாநாயகர் யார் என்பதைத் தீர்மானிப்பார்கள்.

அத்தகைய சூழ்நிலையில் - சபாநாயகர் தேர்தலில் பங்கு பற்றுவதில்லை என்றோ அல்லது ஐ.ம.சு. கூட்டமைப்பு வேட்பாளரை ஆதரிப்பது என்றோ தமிழ் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்தால் ஐ.ம.சு. கூட்டமைபபின் வேட்பாளர் டி.யூ.குணசேகரா சுலபமாக வெற்றிபெறுவார்.

அவ்வாறு இல்லாமல் -ஜாதிக ஹெல உறுமய நடுநிலை வகிக்கும்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இதொ.கா. மலையக மககள் முண்ணனி ஆகியவற்றோடு ஒன்று சேர்த்து தமிழ் தேசியக் கூட்டமைபபு, ஐ.தே.முன்னணியின் வேட்பாளரான லொக்கு பண்டாராவை ஆதரித்தால் அவர் வெல்லுவதும் உறுதியாகும்.

சிறிய கட்சியான மலையக மக்கள முன்னணியின் ஒரே உறுப்பினரான சந்திரசேகரன் இவ்விடயத்தில் தமிழ் கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்படத் தீர்மானித்திருக்கின்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இபபோதைக்கு ஐ.தே.முன்னணிக்கு மாறாகப் போகாது என்று கருதப்படுகிறது.

இந்தநிலையில், இ.தொ.காங்கிரஸின் முடிவு முக்கியமானதாகிறது. இன்று சபாநாயகர் தெரிவின்போது பின்பற்றவேண்டிய உத்திகள் குறித்து ஆராய்வதற்காக இ.தொ.காங்கிரஸின் உயர்மட்டம் நேற்றுக்காலை முதல் மாலை வரை ஒன்றுகூடி பல சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டது.

நாளைய சபாநாயகர் தெரிவின் போது அக்கட்சி எடுக்கப்போகும் நிலைப்பாடு என்னவென்பது இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை.

ஜாதிக ஹெல உறுமய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பன இன்று காலை சபாநாயகர் தெரிவு நடைபெறுவதற்கு சற்று முன்னரே அத்தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதை முடிவு செய்ய இருப்பதால் இவ்விடயத்தில் இறுதி நேரத்தில் பல திடீர் திருப்பங்கள் ஏறபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், சபாநாயகர் தேர்தலில் எம்.பிக்கள் பகிரங்கமாக வாக்களிகக மாட்டார்கள். மாறாக வாக்குச் சீட்டு மூலம் - குடவோலை முறையில் - இரகசிய வாக்களிப்பு இடம்பெறும்.

இரகசிய வாக்களிப்பின்போது சில எம்.பிக்கள் தத்தமது கட்சிகளின் முடிவுக்கு மாறாகவும் வாக்களிக்கக கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் பிரதான பங்காளிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான இழுபறி நேற்றுவரை தீர்க்கப்படாத நிலையில் இவ்வாறு அணி மாறி வாககளிக்கும் எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும் வாய்ப்புண்டு எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் இன்றைய சபாநாயகர் தெரிவில் இறுதி நேரத்தில் பல திடீர் திருப்பங்கள் ஏற்பட வாய்ப்பு உருவாகியிருக்கின்றது.

### சபாநாயகர் தெரிவுதான் இன்றைய முதல் நிகழ்ச்சி

இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றம் இன்று கூடுகின்றபோது முதலில் சபாநாயகர், பிரதி சபாநாயகர் போன்றோர் தெரிவுசெய்யப்படுவர். இதன்பின்னர் குழுக்களின் தலைவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

அதன்பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதே வழமை.

எனினும், இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணம் இடம்பெற மாட்டாது என சில வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பிறிதொரு தினத்திலேயே பதவிப் பிரமாணம் செய்துகொள்வர் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

புதிதாகத் தெரிவுசெய்யப்படும் சபாநாயகர், உத்தியோகபூர்வமாக சபாநாயகர் பீடத்தில் அமர்ந்திருந்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணத்தை நடத்திவைப்பார்.

BIT
University of Colombo
School of Computing
இறுதிச் சந்தர்ப்பம்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியாண்டு 2004/2005 இற்குரிய Bachelor of Information Technology பட்டக்கல்விக்கான, விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.
விண்ணபப முடிவுத்திகதி –26. 04. 2004.
"BIT கற்கைநெறிக்குத் தனித்துவம் மிக்க IIS இல் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்"
மேலதிக விபரங்களுக்கு:
Director
IIS
# 100, Clock Tower Road,
Jaffna

மாபெரும் கருத்தரங்கு
Logic
BY:-S.சயந்தன்,
S.R.J.சுதன் மற்றும்
பிரபல ஆசிரியர்கள்
இடம்:-New Science Hall
கன்னாதிட்டி -யாழ்.நகர்
காலம்:-23-04-2004 வெள்ளி
1.30 p.m. (ப.நே)
குறிப்பு:- (31097)(17)
மாதிரி வினாத்தொகுப்புக்கள் வழங்கப்படும்.

# ஓட்டோ - ஹைஏஸ் விபத்தில் ஒருவர் பலி; ஐவர் படுகாயம்!

## கனகராயன்குளத்தில் செவ்வாயன்று சம்பவம்

வவுனியா,ஏப்.22

ஏ-9 வீதியில், கனகராஜன் குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஓட்டோ மற்றும் ஹைஏஸ் வான் என்பவற்றுக்கிடையில இடம்பெற்ற விபத்தில் டென்மார்க்கிலிருந்து விடுமுறையில் வந்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

வாகனங்கள் இரண்டும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதாகக் கூறப்படும் இந்தச் சம்பவத்தில் ஓட்டோவில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டென்மார்க்கில் வசிபவரும் அராலி தெற்கைச் சேர்ந்தவருமான முத்தையா சற்குணம் (வயது 59) என்பவர் உயிரிழந்தார். இவர் ஆபத்தான நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுப் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதியான அப்புத்துரை விஜயகுமார் (வயது 25), எஸ்நகுலேஸ்வரன் (வயது38), யோகரட்ணம் நளாயினி (வயது23), சிந்துஷா (வயது3), இந்திரகுமார் காயத்திரி (வயது14) ஆகிய ஐந்து பேரும் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகத் தமிழீழ காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விபத்துக்குள்ளான வாகனங்களை தமிமீழ காவல்துறையினர் தடுத்துவைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதியின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வவுனியா ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (எ-9-164)

## 84 புலிகள் வன்னிக்கு மூதூரிலிருந்து சென்றனர்

கொழும்பு ஏப்.22

இராணுவப் பாதுகாப்புடன் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 84பேர் மூதூர் கட்டைபறிச்சானிலிருந்து வன்னிக்குச் சென்றனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் கட்டைபறிச்சானிலிருந்து இரண்டு பஸ்களில் இவர்கள் புறப்பட்டுச் சென்றனர். 48 கடற்புலிகளும் ஜெயந்தன் படையணியின் 36 உறுப்பினர்களுமே வன்னிக்குச் சென்றனர் என இராணுவப்பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நூற்றி ஐம்பது உறுப்பினர்கள் தரை வழியாக வன்னிக்குச் செல்வதற்கு முதலில் இராணுவத்தினரின் அனுமதி கோரப்பட்டது. எனினும், 84 உறுப்பினர்கள் மட்டுமே செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

## ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் பதவிக்கு, முன்னாள் அமைச்சர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டாரவின் பெயரை முன்மொழிவது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. லொக்கு பண்டாரவின் வெற்றிக்காகக் கட்சியின் சகல உறுப்பினர்களும் ஒன்றிணைந்து பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை குறித்து நாடாளுமன்ற உறுபபினர்களுக்கு அவர் தமது நன்றியையும் தெரிவித்தார்.

# இலங்கையிலேயே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓடி விடமாட்டார் என்பதை நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் குறிப்பாக கிழக்குத் தமிழ் மக்களுக்கும் தெரியப்படுத்த அவர் விரும்புகிறார்.

இப்போதைக்குக் கொஞ்சக் காலத்துக்கு 'அமர்த்தி வாசிப்பதற்கே அவர் விரும்புகிறார். பின்னர் அவர் தமது திடீர்த் தாக்குதலை ஆரம்பிப்பார். அப்போது அவரது குழுவுக்கு எதிரான நடவடிக்கையை முன்னெடுக்கும துணிகரத்தில் ஈடுபட்ட ஒவ்வொருவரினதும் தலைவிதி தீர்மானிக்கப்படும். - என்று வரதன் மேலும் கூறினாராம்.

ஆரம்பத்தில் ஜனாதிபதி சந்திரிகா கருணா குழுவினருடன் தொடர்புகளை வைத்திருந்தார் என்றாலும் -

ஆனால், பின்னர் தமிழ்க்கூட்டமைப்பின் முக்கிய நபரான சம்பந்தன ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டு கருணாவை ஜனாதிபதி கைவிட்டால், விடயங்கள் ஒவ்வொன்றினதும் அடிப்படையில் தமிழ்க் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்கும் எனவும் அத்தோடு, புலிகளும் சமாதானப் பேச்சுக்கு வருவார்கள் எனவும கூறியதை அடுத்து நிலைமை மாறியது என்றும் - வரதனை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

பிரபாகரன் - சம்பந்தன் ஜோடி, கருணாவைவிட சிறந்தது என்று ஜனாதிபதி கருதியதால், ஏப்ரல் 10ஆம் திகதி தங்கள் குழு மீது தாக்குதல் நடந்த சமயம் தங்களுக்கு உதவுவதற்கு முன்வராமல் அரசு பின்வாங்கிவிட்டது என்றும் வரதன் குற்றம் சுமத்தினார்.

இந்தியாவின் உளவு அமைப்பான றோவுடன் சேர்ந்து தாங்கள் இயங்குகிறார்கள் எனக்கூறப்படுவதை வரதன மறுத்தார் எனவும் அப்பத்திரிகை தெரிவித்தது.

தாங்கள் 'றோ' அமைப்புடன் சேர்ந்து இயங்கி இருந்திருந்தால், ராஜீவ காந்தி கொலை வழக்கில் பிரபாகரனுடன் மற்றைய முக்கிய குற்றவாளியான பொட்டம்மானின் வலதுகரமான சின்னத்தம்பி என அழைக்கப்படும் நீலனைத் தாங்கள் கொன்றிருக்கமாட்டார்கள் என்று வரதன் கூறினார் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.(ஐ-க)

## ஹெல உறுமய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்ட நாள் தொடக்கம் அவரைத் தாங்கள் காணவில்லை என்று ஹெல உறுமயவின் ஏனைய பிக்குமார் கூறிவந்தனர்.

அவருடன் தொடர்பு கொள்வதற்குத் தாங்கள் எடுத்த முயற்சிகள் ஏதும் பலிக்கவில்லை என்றும் அவர்கள் கூறினர்.

காணாமற்போன எம்.பி. இப்போது அரசுத் தரப்புடன் இருக்கிறார் எனவும் - அவர் இன்று நாடாளுமன்றத்தில் எம்பியாகச் சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அரசுத் தரப்பில் சென்று அமர்வார் எனவும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

IIS
விசேட பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I :23.04.2004 பிரிவு II :24.04.2004
Diploma in Microsoft Office
Diploma in Desk Top Publishing
மாணவர்களே இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.

பழகிய முகம்: புதிய நிறுவனம்
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
★ புதிதாக பல வர்ணங்களில் வடிவமைக்கப்பட்ட கொழும்பு, உள்ளூர் நினைவு மலர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
சகல ஓவ்செற் பிறிண்டிங் வேலைகளுற்கும் நாடுங்கள்.
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்,
183, பலாலி வீதி, கோண்டாவில். (31106)(36-14-37)

## சீ.கே.கந்தசாமி காலமானார்!

கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர் சீ.கே.கந்தசாமி தனது 88 ஆவது வயதில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்றுக் காலமானார்.

1941 இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்த அவர் 1946 ஆம் ஆண்டு அக்கல்லூரியின் உப அதிபராகவும் 1960 முதல் 1971 வரை அதிபராகவும் பணிபுரிந்து தனது 55 ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியோடு முப்பது ஆண்டுகள் தம்மை இணைத்துக் கொண்ட சீ.கே.கந்தசாமி 1989 முதல் தனது மகனுடன் ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## இராஜ சிறிகாந்தனின் நினைவஞ்சலிக் கூட்டம்

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாரடைப்பால் காலமான 'தினகரன் பத்திரிகை முன்னாள் பிரதம ஆசிரியர் இரா.சிறிகாந்தனின் நினைவஞ்சலிக்கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு அன்னாரது நிரந்தர வதிவிடமான அல்வாய் தெற்கு, வதிரியில் உள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது. இலக்கியத்துறை சார் அறிஞர்கள் இதில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

## சு.க.-ஜே.வி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கச் சம்மதித்துள்ளனர் என்றும் -

அப்பதவிகளை அவர்கள் நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து ஏற்கவிருந்தனர் என்றும் - நேற்றுச் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், அத்தகைய செய்திகளில் உண்மைகள் இல்லை என்றும் - நேற்று இச்செய்தி எழுதப்படும் வரை சமரசம் ஏற்படவில்லை என்றும்-எனினும், இன்று நாடாளுமன்றம் கூடும்போது அரசுத் தரப்பில் அமர்ந்திருந்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவாகச் செயற்பட ஜே.வி.பி. தீர்மானித்திருந்தது என்றும் -

அக்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-க)

## எஸ்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணித்தது.

அந்தக் குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் எஸ்.பி.திஸாநாயக்காவை உயர்நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பாணை அனுப்ப நீதி மன்றம் உத்தரவிட்டது.

அதனடிப்படையில், அழைப்பாணையை அவரது கொழும்பு இல்லத்துக்கு எடுத்துச்சென்ற நீதிமன்ற அதிகாரிகள் அவர் வீட்டில் இல்லாததால் அவருக்கு அதனை விநியோகிக்க முடியவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

ஆஸ்திரேலியா சென்றிருந்த எஸ்.பி. திஸாநாயக்க, அண்மையில்தான் நாடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## கான்ஸ்டபிள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட என்ற இந்த நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு கடமையில் இருந்தபோது இவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-9-164)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை செல்லத்துரை

யாழ்ப்பாணம், ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்டவரும் சுன்னாகம் மரக்கூட்டுஸ்தாபனத்தில் பணிபுரிந்தவருமான ஐயாத்துரை செல்லத்துரை அவர்கள் 18.04.2004 அன்று காலமானார்.

அன்னார் ஐயாத்துரை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் வல்லிபுரம் - ஆச்சிமுத்துவின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் கிரிஜா(வவுனியா), வனஜா(பிரான்ஸ்), மாலினி(கொழும்பு), பிறேமா(லண்டன்), பிரபாகரன்(லண்டன்), கவிதா(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனும் சுப்பிரமணியம்(வவுனியா), பஞ்சலிங்கம்(பிரான்ஸ்), ஆனந்தராஜா(கொழும்பு), ஸ்ரீகரன்(லண்டன்), சாந்தி(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கண்மலர், சின்னமணி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற நல்லையா, கனகரத்தினம், காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் மைத்துனரும் குசேன், பிரவீன், அஷ்விலி. ஜெனுசா, திவ்விஜா, பவிதன், நிவேதா, அருண் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்பட்டு 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கிரியைகள் நடைபெற்று கனத்தை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

a1/7, அன்றூசன் தொடர்மாடி,
கொழும்பு - 5
நாரகேன்பிட்டியா.
T.P:2590672

தகவல்:
க.ஆனந்தராஜா.
(31151)(36-14-37)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.